# இனமத குரோதங்களைத் தூண்டும் நபர்கள் மீது

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 52
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 21 முஹர்றம் 25 வெள்ளிக்கிழமை [3-4-70]

உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரேட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119 தந்தி: வைரம்

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்.
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டு பக்கமும் தறையப்பட்டது
எல்லா அளவுகளிலும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130

## பொலிஸ் கண்ணோட்டம்

கொழும்பு, வியாழன்

இன, மதக் குரோதங்களைக் கிளப்பிவிடக் கூடியவர்கள் என்று கருதப்படும் 31 நபர்கள் மீது இரகசியப் பொலிஸ் விசேஷப் பிரிவு தீவிர கண்காணிப்பு செலுத்தி வருகின்றது. இந்த 31 பேரில் சிங்கள, தமிழ் இரு இனத்தையும் சேர்ந்த தீவிரவாதிகள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் ஸ்தாபன ரீதியாக இயங்குவதாகவும், மற்றவர்கள் தனித்தனியே இயங்குவதாகவும் பொலிசார் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

தேர்தலை நோக்கமாகக் கொண்டு இன, மதக் குரோத உணர்ச்சிகளைத் தூண்டி விடுகிறவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் சமூகத்துரோக நடவடிக்கைகளை முளையிலேயே நசுக்கி விடவேண்டும் என்பதே பொலிசாருக்கு விடுக்கப்பட்டுள்ள உத்தரவு. (சி.பி.ஏ)

# "மர்ம விமானம்" வவனியாவில் நால்வருடன் தரையில் இறங்கியது

## 24 மணி நேரமும் பணியாற்றும் 'திடீர்' சோதனைக் கோஷ்டி

### யாழ்ப்பாணத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

பொது தேர்தலையொட்டி 24 மணித்தியாலமும் கடமையாற்றுவதற்காக 'திடீர்' பொலிஸ் குழுவொன்று யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட்டுள்ளது.

சப் இன்ஸ்பெக்டர் வராகொடா, சப்இன்ஸ்பெக்டர் தர்மரத்தின சார்ஜன்ட் ஒருவர், 10 பொலிஸ் கன்ஸ்டபிள்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். இக்குழுவிற்கு 'ஜீப்' ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி தேர்தல் தொகுதிகளுக்கு இக்குழு திடீர் விஜயம் செய்யுமென்றும், வீதியோரங்களிலும், சந்திகளிலும், கடைகளிலும் கூட்டமாக நிற்போர்கள் மீது நடவடிக்கை எடுக்குமென்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இக்குழுவினர் திடீர் சோதனையும் நடத்துவார்கள்.

அரசியல்கட்சி ஆதரவாளர்களாகவிருக்கும் "சண்டியர்களையும்", ஒழுங்கீனமாக நடப்பவர்களையும், மது பானம் அருந்திய நிலையில் காணப்படுபவர்களையும் இக்குழு கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

வவுனியா

## கொலைமுயற்சி வழக்கு இன்று தீர்ப்பளிக்கப்படலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா கொலைமுயற்சி வழக்கு நேற்று மூன்றாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி.ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இன்று காலை தீர்ப்பளிக்கப்படலாம்.

இவ் வழக்கில் வவுனியாவில் 68ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் தேதி வேலுப்பிள்ளை பாலசிங்கம் என்பவரை, கொலைசெய்ய முயற்சித்ததாக, கதிரவேலு நாகலிங்கம், கதிரவேலு தர்மலிங்கம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் டபிள்யூ. செந்தில்நாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல் டி. குருசாமி ஆஜரானார்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்

## இன்று இவர்கள்

## உளவு பார்க்க வந்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், வெள்ளி

**இலங்கையின் எல்லைக்குள் வேற்று நாட்டு விமானம் ஒன்று அத்துமீறிப்பிரவேசித்து தரைஇறங்கியதா? என்ற கேள்வி பற்றிய பிரச்னை இலங்கை அரசாங்கத்துக்கேற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.**

**வவனியா தொகுதியில் நேற்றுமுன்தினம் மர்ம விமானமொன்று இரகசியமாகத் தரையிறங்கிப் புறப்பட்டுச்சென்றுள்ளதே இதற்குக் காரணம். இந்த விமானம் நட்பு நாடொன்றைச் சேர்ந்ததா அல்லது உளவு வேலையில் ஈடுபட்டிருந்ததா என்பதை அறிவதில் பொலிசார் முழு மூச்சாக இறங்கியிருக்கிறார்கள்.**

வவனியா தொகுதியில் உள்ள தச்சன் குளம் என்ற இடத்திலிருக்கும் பாவனையி

ரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி வட்டகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர்.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கும் முன்னதாக அறிவிக்கப்படுவது வழக்கம்

## குடும்பத்திட்டம் அதிகரிக்கப்படும்

மாவிட்டபுரம், வியாழன்

யாழ் மாவட்டதில் குடும்ப நலத்திட்டத்துக்கு ஆதரவுகொடுத்து தீவிரமாக பிரசாரம் செய்வதென குடும்பநலச் சங்கம் யாழ் மாவட்டக்கிளை முடிவு செய்துள்ளது.

டாக்டர் சிவஞானரத்தினத்தின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அகில இலங்கை குடும்ப நலச் சங்கச் செயலாளர் திருமதி சி. சி. பெர்ணண்டோவும் கலந்து கொண்டார்.

— —

## இரு தொழில்நுட்ப கல்லூரி விவாதம்

மருதானை, வியாழன்

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் கட்டுபெத்தை உயர்

## யாழ்ப்பாணத்தில் மணிலா செல்லும் கோஷ்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

மணிலாவில் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளச் செல்லும் இலங்கை இளைஞர் விளையாட்டுத் தெரிவுக்கோஷ்டி யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 5ம், 6ந் தேதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி இளைஞர் தெரிவுக்கோஷ்டியுடனும், யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத் தெரிவுக் கோஷ்டியுடனும் மோதும். இலங்கைக் கோஷ்டி இப்போது யாழ்ப்பாணத்தில் இருக்கிறது.

யாழ். சென் பற்றிக்ஸ் மைதானத்தில் இந்த

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றுமாலை இழுக்கப்பட்ட 293-வது தேசியசுவீப் முடிவுகள் விபரம் வருமாறு-

முதலாம்பரிசு

16 S 0230 ரூ. 100000

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரை, கொலைசெய்ய முயற்சித்ததாக, கதிரவேலு நாக

# இன்று இவர்கள் உண்ணவிரதம்?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ், சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவர்த்திச்சங்க உறுப்பினர்களான மு. வ. சிவசுப்பிரமணியம், மா. ஐயனு, ச. கணேசு ஆகிய மூவரும் இன்று காலை 6 மணிதொடக்கம் பிரஸ்தாப சங்கக்காரியாலயம் முன் உண்ணவிரதம் அனுஷ்டிக்க விருக்கின்றனர்.

கீழ்க்காணும் கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் உண்ணவிரதத்தை மேற்கொள்கின்றனர்.

''சலுகைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டதை உடன் வாபஸ் பெறவேண்டும்

உபவிதிக்கு மாறுனவகையில் நிர்வாகம் நடந்துகொண்டதை எடுத்துக்காட்டிய அங்கத்தவர்கள்மேல் சலுகைகள் இடைநிறுத்தம் செய்யப்படவேண்டுமென தீர்மானித்த நிர்வாகசபையிலு நம்பிக்கையின்மையை ஆதாரமாககொண்டு நிர்வாகசபையை உடன்கலைக்க வேண்டும்.

அங்கத்தவர்கள் மத்தியில் நல்லெண்ணமும் நன்னம்பிக்கையும் நிலவுமட்டும் மேற்படி சங்கத்தை தங்கள் நிர்வாகத்தின் கீழ் அடுத்து நடாத்துமாறு கோருகின்றோம்.

இக்கோரிக்கைகளை யாழ். கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள இவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்வரை உண்ணவிரதத்தைத் தொடர்ந்து நடத்துவதெனத் தெரிவித்துள்ளனர்.

## குருநகர் குடியேற்றத் திட்ட வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

குருநகர் பாஷையூர் குடியேற்றத்திட்டத்திற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. காணி நீர்ப்பாசன அமைச்சின் சிபார்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளஇத்திட்டத்தில் சுமார் 60 குடும்பங்கள் குடியேற்றப்படவிருக்கின்றன.

ஒரு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இத்திட்டம் 10 ஏககர் நிலத்தில் அமைக்கப்படுகிறது. கடல்நீர் இங்கு வராதபடி அணைக்கட்டுவேலையும் நடைபெறுகிறது. வவனியாவிலுள்ள வடபகுதி நீர்ப்பாசன என்ஜினியரின் பார்வையின்கீழ் யாழ்ப்பாணம் நீர்ப்பாசன பொறியியல் பகுதியினர் இவ்வேலையைக் கவனித்துவருகின்றனர்.

(கு. வி ம.)

## பௌத்த மாநாடு

கோட்டை, வெள்ளி

உலகப்பௌத்தர்கள் சங்கத்தின் 20வது ஆண்டுவிழா அடுத்த வருடம் மே மாதம் நடைபெறுகிறது.

## “ஈழநாடு”

### பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் ‘பாலைதீவு விபத்து நிவாரணநிதி’, ‘ஈழநாடு’ யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**உதவி வழங்கியோர்:**

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 8992-82 |
| ஜே எஸ் இளையதம்பி, மருதங்கேணி செம்பியன்பற்று (காசோலை) | 50-00 |
| அனுதாபி வட்டுக்கோட்டை | 10-00 |
| க. கணேசப்பிரபு. பிரவுண் வீதி | 10-00 |

உளவு வேலையில் ஈடுபட்டிருந்ததா என்பதை அறிவதில் பொலிசார் முழு மூச்சாக இறங்கியிருக்கிறார்கள்.

வவனியா தொகுதியில் உள்ள தச்சன் குளம் என்ற இடத்திலிருக்கும் பாவனையில்லாத விமானத்துறையில் சிவப்பு வெள்ளை நிறங்களைக் கொண்ட ஒரு மர்ம விமானம் நேற்று முன் தினம் வந்திறங்கியது. இரட்டை யந்திரங்களைக் கொண்ட இந்த விமானத்தில் ‘எவரெடி’ என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கட்பட்டிருந்தது. விமானத்தின் முன் பக்கத்தில் 4 R A I என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. விமானத்தில் நால்வர் வந்திருந்தனர். காலை 9 மணியளவில் வந்திறங்கிய இந்த விமானம் சிறிது நேரத்தில் அங்கிருந்துபுறப்பட்டுவிட்டது.

மர்ம விமானத்தின் நடமாட்டம் பற்றி பூரண விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வவனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி கட்டுநாயக்கா விமானநிலையத்துடனும், திருக்கோணமலையிலுள்ள விமானநிலையத்துடனும், இலங்கை விமானப்படையினருடனும் வடபகுதி பொலிஸ் அதிபர் தொடர்பு கொண்டுள்ளார்.

தச்சன்குளத்திலுள்ள பாவனையிலில்லாத விமானத்துறை மந்திரிகள் யாராவது வருவதென்றால்தான் பாவிக்கப்படுவது வழக்கம். அங்கு விமானமொன்று வருவதானால் திருக்கோணமலையிலுள்ள விமான நிலையத்தினருக்கும் வவனியா பொலிஸ் நிலையத்திற்கும் முன்னதாக அறிவிக்கப்படுவது வழக்கம்.

வவனியா பொலிசாருக்கு அறிவிக்காமலே இந்த மர்ம விமானம் அங்கு இறங்கியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. விமானம் தரையில் இறங்கிய தகவல் வவனியா பொலிசாருக்குக் கிடைத்ததாகவும் பொலிசார் திடீரென தச்சன்குளத்திற்குச் சென்றபோது அந்த விமானம் அங்கிருந்து புறப்பட்டுவிட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்

இந்த மர்ம விமானம் இலங்கையைச் சேர்ந்ததா அல்லது அந்நிய நாட்டைச் சேர்ந்ததா என்பது பற்றி அறிவதற்கு பொலிசார் பூரண விசாரணை நடாத்தி வருகின்றனர்

## பால்முட்டி வைபவம்

காரைநகர், வியாழன்

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடி வைரவர் கோவில் பால்முட்டி வைபவம் வருகிற 16-ம் திகதி பி. ப. 2 மணி தொடக்கம் மாலை 6-30 மணிவரை கோவில் முன்றலில் நடாத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## மின்சார வேலைகள் நிறுத்தப்படும்

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டிக்கிராமசபையின் எல்லைக்குட்பட்ட கொட்டப்புலம், தம்பாலை ஆகிய இடங்களில் நிகழும் மின்சார இணைப்புவேலைகளை உடன் நிறுத்துமாறு மயிலிட்டிக்கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சபைத்தலைவர் கு. தி. இராசதுரை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பலாலி-மயிலிட்டி வடக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதெனசபை முன் தீர்மானம் நிறைவேற்றி அதை நிறைவேற்றுறு அந்த ஒப்பந்தக்காரரை கொண்டு கொட்டகப்புலம் தம்பாலை ஆகியஇடங்களில் மின்இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால்இதுபற்றி விசாரணை நடாத்த வேண்டும் எனவே உடன் மின் இணைப்பு வேலைகளை நிறுத்த வேண்டும் எனக் கோரும் இத்தீர்மானம் 10-ம்வட்டார அங்கத்தவர் சி. செல்லையாவினுல் கொண்டுவரப்பட்டுநிறைவேற்றப்பட்டது

## ‘பதவிக்கு வரும்போதெல்லாம் பங்கீட்டரிசியில் வெட்டு’

நுகேகொடை, வியாழன்

‘எதிர்வரும் பொதுத்தேர்தலில் தற்போதைய அரசாங்கமே திரும்பவும் அதிகாரத்துக்கு வந்தால் சிங்கள மக்கள் அடக்கி ஆழப்படுவார்கள்’

கோட்டைச் சந்தியில் நடைபெற்ற கூட்டணி பிரசாரக்கூட்டத்தில் காலி மாநகரசபை அங்கத்தவர் திரு. டபிள்யூ. டி. எஸ். அபேகுணவர்த்தன பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் 25 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அங்கத்தவராக விருந்தநான் தேசிய அரசாங்கத்தின் கொள்கைகளில் வெறுப்புற்றே ஐ. தே. கட்சியைவிட்டு வெளியேறினேன் இந்த அரசாங்கம் செய்தது என்னவெனில் வறிய மக்களின் உழைப்பில் முதலாளிகள் நலனைக் கவனித்தமையேயாகும். திரு. டட்லி சேனநாயக்கா அதிகாரத்துக்கு எந்த வேளையில் வந்தாலும் பங்கீட்டரிசியைக் குறைத்துவிடுவார். இந்த தடவையும் அரிசி குறைப்பு சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தபோது நான் அதை தீவிரமாக எதிர்த்தேன். திரு. டட்லி சேனநாயக்கா ஒரு சில முதலாளிமார்களால் தீயவழியில் போதிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதமருக்கு தெற்கில் ஒரு ஸ்தானமும் கிடைக்காது என நான் உறுதியாககூறுவேன்.

திரு. ஆர். எஸ். பெரேரா, திரு. அனில்முனசிங்கா, திரு. ரத்னவீர, டாக்டர் என். எம். பெரேரா உட்படப் பலர் உரையாற்றினர்.

## கட்டுப்பணம் கட்ட முடிவு

பூநகரி, வியா

பூநகரி சக்தி கிராமமுன்னேற்றச்சங்கம் கிளிநொச்சித் தொகுதியி தமிழரசுக் கட்சி ஆதரவில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் ஆலாலசுந்தரத்தின் தேர்தலுக்கானகட்டுப்பணத்தை பொதுமக்களிடம் சேகரித்து கட்டுவதென முடிவுசெய்துள்ளது

திரு தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது.

## புங்குடுதீவு கண்ணகை அம்மன் உற்சவம்

ஊரைதீவு, வியா,

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள்கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 12-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 17-ம் திகதி கப்பல் திருவிழாவும் 20-ந் திகதி வேட்டைத் திருவிழா 21-ந் திகதி தேர்த்திருவிழா வையடுத்து பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியுறும்.

## கல்லூரி விவாதம்

மருதானை, வியாழன்

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் கட்டுபெத்தை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை தமிழ்மன்ற மாணவரும், இலங்கைதொழில் நுட்பக்கல்லூரி தமிழ்மன்ற மாணவரும்கலந்துகொண்டனர்.

தீண்டாமை பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பலாத்காரம் பயன் படுத்தக் கூடாது, என்னும் பொருள்பற்றி திரு பா பாலபாஸ்கரன் தலைமையில் விவாதம் நடைபெற்றது.

இருதரப்பு வாதங்களிலும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயமும், மாவிட்டபுரம் ஆலயவிவகாரமும் உதாரணமாக அடிக்கடி இடம்பெற்றன.

## 1 கோடி 65 லட்சம் பாக்கி

கோட்டை, வியாழன்

1கோடி 65லட்சம் ரூபா வருமான வரி இலாகாவுக்கு வருமதியுள்ளது. இத்தொகையோடு இன்னும் மேலதிகமாக 5 லட்சம் ரூபா வருமதியுள்ளது எனத் தெரிய வருகிறது. இது, மக்கள் அரசாங்கத்தின் மதிப்பீட்டுக்கு எதிராக மனுச்செய்ததையொட்டி இந்த வருமதி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

பந்தாட்டச் சங்கத் தெரிவுக் கோஷ்டியுடனும் மோதும். இலங்கைக் கோஷ்டி இப்போது யாழ்ப்பாணத்தில் இருக்கிறது.

யாழ். சென் பற்றிக்ஸ் மைதானத்தில் இந்த மோதல்கள் இடம்பெறும். இப்போட்டி மூலம் கிடைக்கும் பணம் பாலைதீவுப் படகு விபத்தில் மாண்ட குடும்பங்களுக்கு வழங்க யாழ். உதைபந்தாட்டச் சங்கம் தீர்மானித்துள்ளது.

## இடதுசாரிகள் எதிர்த்தனர்

உடுப்பிட்டி, வியாழன்

'நாம் ஒற்றுமையாக இயங்கினாலே அடிப்படையான ஒருசில உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எம்மிடையே ஒற்றுமையின்மையினுல் ஏற்பட்ட விளைவுகளை கடந்தகாலங்களில் அனுபவித்து விட்டோம்என முன்னுள் உபசபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம்வல்வெட்டியில் தமிழ்க காங்கிரஸ் காரியாலயத்தை திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திரு வ, அப்புத்துரை திறப்பு விழாவுக்கு தலைமை வகித்தார்.

வழக்கறிஞர் எஸ் மோதிலால் நேரு பேசுகையில் எமது மொழிக்கு கிடைக்க இருந்த அற்ப சலுகைகளையும் கூட இடதுசாரிக கட்சிகள் எதிர்த்ததால்தான் நான் இடதுசாரிக கட்சியிலிருந்து விலகினேன்- நான் நன்கு சிந்தித்தே இம்முடிவைஎடுத்தேன் என்றார்.

## முடிவுகள்

சொழும்பு, வெள்ளி

நேற்றுமாலை இழுக்கப்பட்ட 293-வது தேசியசுவீப் முடிவுகள் விபரம் வருமாறு-

முதலாம்பரிசு

16 S 0230 ரூ 100000

இரண்டாம் பரிசு

08 V 0862 ரூ 40,000

மூன்ரும்பரிசு

22 B 0034 ரூ 10,000

தலா 694-60 பரிசுபெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 33 W 0335 | 42 D 0546 |
| 29 Y 0326 | 27 Z 0889 |
| 40 M 0956 | 03 J 0695 |
| 24 E 0211 | 13 G 0437 |
| 24 F 0350 | 30 R 0452 |
| 30 V 0362 | 41 L 0840 |
| 17 G 0481 | 31 Q 0534 |
| 08 M 0035 | 19 Q 0077 |
| 26 J 0612 | 11 F 0295 |
| 14 R 0918 | 28 N 0329 |
| 06 O 0825 | 04 M 0425 |
| 33 F 0939 | 25 U 0563 |
| 34 P 0518 | 34 R 0343 |
| 30 S 0465 | |

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை) மிகுதி நாளை வெளியாகும்.

## நிதிமந்திரி ராஜிநாமா

திருவனந்தபுரம், ஏப்ரல் 2

கேரள நிதிமந்திரி திரு சி. கேஷவ் ராஜிநாமாச் செய்துள்ளார். முதல் மந்திரி திரு அச்சுதமேனன் ராஜிநாமாச் செய்யும்படி அறிவித்ததைத் தொடர்ந்து அவர் ராஜிநாமாச் செய்தார்.

பொதுத்தேர்தலில்

# புதிய அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரமில்லை

கோட்டை, வியா

இலங்கையின் ஆறுவது . ஆட்சி மன்றப் பொதுத் தேர்தலுக்கு எந்தவொரு புதிய அரசியல்கட்சிகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

மே மாதம் 27-ம் திகதி நடக்கவிருக்கும் இலங்கை பொதுத்தேர்தலுக்கு 8 அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஐக்கியதேசியக் கட்சிக்கு யானையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு கையும் தமிழரசுக்கட்சிக்கு வீடும். சமசமாஜக் கட்சிக்கு திறப்பும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நட்சத்திரமும் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு வண்டிச்சில்லும், ஜாதிக விமுக்தி பெரமுனைக்கு விமானமும் சின்னங்களாக தேர்தல் கமிஷனரால் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 23-ம் திகதி நியமனப்பத்திரங்கள் தாக்கலாகும்.

## சேரி ஒழிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சேரி ஒழிப்புத் திட்டப்படி யாழ்ப்பாண மாநரசபையின் 19, 21ம் வட்டார மக்கள் பள்ளிக்குடாவுக்கு குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்!

சன நெருக்கமாக வாழும் மேற்படி வட்டாரங்களின் மக்களைப் பூநகரிப் பகுதியில் பள்ளிக்குடா என்ற இடத்திற்கு குடியேற்றம் செய்ய விண்ணப்பங்கள் கோரப்படும். யாழ்ப்பாணக் காரியாதிகாரியும், குடியேற்ற அதிபரும் அந்தந்த வட்டார மக்களது விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வார்கள். (குவிம)

## பாரத--சோவியத் விமானப் போக்குவரத்து

புதுடில்லி, ஏப். 2

பாரதம் சோவியத் யூனியனுக்கிடையிலான விமான போக்குவரத்துக்கான ஒப்பந்தம் இன்று இரு நாடுகளுக்கிடையில் புதுடில்லியில் கைச்சாத்தானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

பிரம்படி கொக்குவிலில் இரண்டு பரப்பு, வீடு, கிணறு, குளிக்கக்கூடு, தென்னை, பலா, மா உட்பட. நேரில் வரவும். S. S. கனகலிங்கம், றஞ்சித பவனம், பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். 2004

கொக்குவிற் குளப்பிட்டி-ஆனைக்கோட்டை றோட்டில் உயரப்புலத்தில் 4 1/2 பரப்பு றோட்டுக் கரைக் காணி விற்பனைக்குண்டு. ப. இலங்கநாயகம், 11, ஒடைலேன், ஐயனார் கோவிலடி, வண்ணார் பண்ணை. 2005

### தவறிவிட்டது

பொன்னுத்துரை, வாலாம்பிகை, பாலச்சந்திரன், உமாதேவி, சிவநாயகி, கமலாதேவி, கணேசன், புனிதவதி ஆகிய பெயருடைய எட்டுக் கூப்பன்கள் ரவுனில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2006

### தேவை

பெற்றோல் செட்டுக்குப் பிணைப்பணம் கட்டக்கூடிய மனேஜரும் கடை வேலையில் சேல்ஸ்மனும் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2007

காலை 7 மணி தொடக்கம் பகல் 12-30 மணி வரை பிற்பகல் 1-30 தொடக்கம் மாலை 7-30 வரை காஷியர் வேலை செய்வதற்கு இருவர் தேவை. ஒவ்வொருவருக்கும் பிணைப்பணம் ரூபா 500/- 5-ந் திகதிக்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். சண்லைட் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ், பஸ்நிலையப் பக்கம், யாழ்ப்பாணம். 2009

### அரசாங்கக் கேள்விகள்

கமத்தொழிற் திணைக்களம்

என். 1442 - 1969/70-ம் நிதிவருட பூநகரி உரப் பண்டசாலையில் ஏற்றி இறக்கும் வாகன சேவைக்கான கேள்விப்பத்திரங்கள் 1970-4-27-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரைக்கும் யாழ்ப்பாணம் கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்கட்கு 1970-4-3-ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

G. P. 2408

### வாடகைக்கு

வீடு:

K. K. S. றோட், சிவப்பிரகாசம் வீதி சந்தியிலிருந்து கிழக்கே மூன்று வீடுகள் தள்ளி சகல வசதிகளுடன் புதிய வீடு 15-4-70 திலிருந்து வாடகைக்கு விடப்படும் விபரங்களுக்கு: 39, சிவப்பிரகாசம் வீதி, திரு K. S. திரவியத்துடன் தொடர்பு கொள்ளவும். 2010

### WANTED

Wanted - Manager for a firm in Vavuniya with knowledge of Tractor and Motor Spares, Agro-chemicals and able to maintain accounts. Salary according to qualifications and experience. Apply Avdt No. 2008 C/o Box No. 49, Eelanadu. 2008

### கண்டெடுத்த கூப்பன்

யாழ். மத்திய கல்லூரிக்கு முன்பாக அரிசிப் பங்கீட்டுப் புத்தகமொன்றைக் கண்டெடுத்து யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த வி. சிவானந்தா என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம் ஜி ஆர் - அஞ்சலாதேவி
நடித்த
சர்வாதிகாரி

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஏல விற்பனை

கருவாட்டுக்கடை இல. 18, பெரியகடை

15-4-1970 தொடக்கம் 31-12-1970 வரை மேற்படி கருவாட்டுக் கடையைக் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமான உரிமை பிரசித்த ஏல விற்பனை மூலம் எதிர்வரும் 11-4-1970-ந் திகதி சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் வைத்து விற்கப்படும்.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்கான கேள்வித் தொகை முழுவதையும் கேள்விக்காரர் ஏல விற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும். மற்றும் சபையின் விதிகளுக்கமைய இக்குத்தகைக்கான ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திடல்வேண்டும்.

மேற்கொண்டு தேவைப்படும் தகவல்களை அலுவலக நேரத்தில் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்
யாழ் மாநகராட்சி மன்றம்:

மா. ம அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1-4-70 2201

### MITE ORGANIZATION கட்டிட மேற்பார்வையாளர் பயிற்சி

சென்றமாதங்களில் எங்கள் ஸ்தாபனத்திற்கு மேற்பார்வையாளர் உத்தியோகத்திற்கும் பயிற்சிக்கும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன. விண்ணப்பதாரிகள் இவ்வறிக்கையைக் கண்டவுடன் எங்கள் யாழ்ப்பாணம் நகரசபை மத்திய சந்தை வேலைத்தலக் கந்தோருக்கு மாலை 5-6 மணிக்கிடையில் வந்து நேர்முக எழுத்துப் பரீட்சைகளுக்காகிய திகதி, நேரங்களைக் குறித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்களின் நடத்தையைப் பற்றிய நற்சாட்சிகள், பெரியோர் அறிமுகம், குடும்ப நிலை ஆகியவற்றிலும் பார்க்கஅடிப்படைத் தொழில்நுட்பத் திறமை கஷ்டப்பட்டு வெளித்தல வேலைகள் செய்யும் பண்பு சுகாதாரம்தொழிற்கல்வி, சமூக, மன அமைப்பு முதலியவற்றிற்கு மிகவும் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

கலாநிதி
கோபாலபிள்ளை மகாதேவா
தலைவர் 'மயிற்'ஸ்தாபனம்
2204

மன்னார்
மார்ச்-31-1970

### மன்னார் பட்டினசபை ஆளுங்கட்சி பகிஷ்கரிப்பு

மன்னார் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் மார்ச் 31-ந் திகதி நடப்பதாக அங்கத்தவர்கட்கு அறிவிக்கப்பட்டது. அன்று கூட்டத்துக்கு பெரியகடை வட்டார அங்கத்தவர் திரு. க. கா. வைத்திலிங்கமும், பறங்கித்தெரு வட்டார அங்கத்தவர் அ. இ. பிருன்சிஸ் இருவரும் சமூகம் கொடுத்தனர். கூட்டத்துக்கு தலைவர் உட்பட அவர்கட்சி அங்கத்தவர்கள் ஐவரும் சமூகம் கொடுக்கவில்லை. 3-3-70 இல் நடந்த பொதுக் கூட்டத்தில் மேற்கூறிய இரு அங்கத்தவர்களும் கேட்ட கேள்விகளுக்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியபடி நடைமுறை செய்யாதிருந்த காரணத்துக்காகவும் 31-3-70இல் நடைபெறவேண்டிய கூட்டத்தில் சமூகம் கொடுத்து மறுமொழி பகரமுடியாமையால் கூட்டத்தை தலைவர் கட்சியும் பகிஷ்கரித்துள்ளதாக மக்கள் யூகிக்கிறார்கள்.

### யாழ். மாநகரசபை 'மீட்டர் றீடர்' உத்தியோகத்தர் பதவி

ஷெ உத்தியோகத்தர் பதவிக்கு யாழ். மாநகரசபை ஆணையாளரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2. யாழ். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களே விண்ணப்பிக்கலாம்.

3. தேவைப்படும் தராதரங்கள்:

அ. வயது: 1-4-70 அன்று 35 வயதிற்கு மேற்படாதிருக்க வேண்டும்.

ஆ. தமிழ் அல்லது ஆங்கிலமொழி ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்தி ஆங்கிலத்தில் செயலாற்றும் திறமைக்கு முன் உரிமை உண்டு.

இ. தொழில்நுட்பம்: அங்கீகாரம் பெற்ற தொழில் நுட்பப் பாடசாலையில் மின் அமைப்பு பயிற்சி அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும்.

4. விண்ணப்பிப்போர்தங் [illegible]

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 21-ம் திகதி [3-4-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. தெய்வ நம்பிக்கைவேண்டும்.

**ரிஷபம்-** அன்னைவழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம். பொருள் வரவுக்கும் இடமுண்டு, சிறப்பான தினம்.

**மிதுனம்-** நீண்டநாட்களின் பின்பு இன்று நிறைவானதினம், எதிர்பார்த்தபொருள் கைவந்து சேரும். பிரம்மசாரிகளின் வாழ்க்கையில் மாரனின் கணை தாக்கும். சுவையான சம்பவம் இடம்பெறும்.

**கடகம்-** பகைமூட்டம் ட்டமிடும் வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில்துறையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். கடிதமொன்று கவலையைத் தரலாம். மனத்திடம்வேண்டும்.

**சிம்மம்-** சந்திப்பின் மூலம் பயன்உள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும். மகிழ்சியானதினம்,

**கன்னி-** விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம் இன்று சும்மா இருப்பதே சுகம்.

**துலாம்-** தெளிந்தமனம். தெய்வ குருபக்தியுடன் தேடியது கிடைக்கும். பரோபகாரசிந்தை வளரும். பொதுப்பணியை நாடுவீர்.

**விருட்சிகம்-** எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். சொந்தமாக தொழில்செய்வதில் ஆர்வம் பிறக்கும். அரசாங்க ஊழியராயின் பதவிஉயர்வுகிடைக்கலாம்,

**தனுசு-** பொருள் ஈட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதல்இடத்தை பெறுவீர்கள், மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**மகரம்-** குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக்கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

**கும்பம்-** நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளை தவிர்த்துக்கொள்ளவும். சமயோசிதபுத்தியினால் எதையும் சமாளிக்கலாம்,

**மீனம்-** நேர்முகப்பரீட்சைக்கு உகந்ததினம், தெய்வத்தின் அருள் தாராளமாய்க் கிடைக்கும், அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

# 'குருநகர் விரைவில் பூரண ஒளிபெறும்'

— மேயர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''குருநகர் மக்கள் மிக விரைவில் பூரண நிறைவுள்ள மின்சாரத்தைப் பெறுவதற்கு யாழ். மாநகரசபை சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.'' இவ்வாறு யாழ். மாநகரசபை மேயர் திரு. துரைராசா 'றெக்கிளமேஷன்' சனசமூக நிலையத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது [illegible]

[illegible] காரி திரு. ஞா. பங்சநாயகம் ஆகியோரும் பேசினர். (தே. நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 3—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

# விடுமுறைக் கழகங்களில் 1500 ஆங்கில ஆசிரியர்

### இம்மாதம் 17 தொடக்கம் 29 வரை நடக்கும்

பருத்தித்துறை, வியாழன்

1500 ஆங்கில ஆசிரியர்க்கான கட்டாய விடுமுறைக் கழகமொன்று இம்மாதம் 17-ம் திகதி தொடக்கம் 29-ம் திகதிவரை பல இடங்களில் ஏககாலத்தில் நடைபெறுமெனக் கல்வியமைச்சின் ஆங்கில பாட பிரதம கல்வியதிபதி திரு. லெனி குணவர்த்தன சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.

கட்டுபெத்த தொழில்நுட்பக் கல்லூரி, பேராதனை பயிற்சிக்கலாசாலை, மீரிகம பயிற்சிக்கலாசாலை, இரத்தினபுரி சிவாலி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய நிலையங்களில் நடக்கவிருக்கும் விடுமுறைக் கழகங்களில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு இலவச உணவு, விடுதி வசதிகளும் அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் போதிப்பதற்கான கோட்பாடுகளும் முறைகளும் பற்றிய அம்சமே இவ்விடுமுறைக் கழகங்களிற் பெரிதும் வலியுறுத்தப் படுமெனத் தெரிகிறது. இவ்விடுமுறைக் கழகத்திற் பெருமளவு பெண் ஆசிரியைகளும் பங்குபற்றுகின்றனர்

# தமிழ் கோரிக்கைகளை அரசாங்கங்கள் ஏற்காதகாரணம்

### திரு. சிவசிதம்பரம் விளக்கம்

உடுப்பிட்டி, வியாழன்

''1960-ம் ஆண்டு முதல் 65-ம் ஆண்டுவரை எமது இனத்தின் சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காக எதிர்க்கட்சியிலிருந்தேன். அச்சமயத்தில்தமிழினத்தின் முக்கியமான பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணவேண்டிய கடமைகள் என்னை எதிர்நோக்கியிருந்தன. இதனால் தமிழரசுக்கட்சியினருடன் ஒத்துழைத்தேன்''

இவ்வாறு முன்னாள் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் துன்னாலையில் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளையைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து கூறியதாவது:

''நமதுநாடு முன்னேற விவசாயப், தொழில்துறை முன்னேற வேண்டும். நவீன விஞ்ஞான வசதிகளைப் பாவித்து விவசாயிகள் அபிவிருத்தியில் ஈடுபடவேண்டும்.

தென்னிலங்கையில் ஆர். ஜீ. பஸநாயக்கா போன்றோரின் வகுப்புவாதப் பேச்சுக்களை நம்ப ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் தயாராக இருப்பதினாலேயே அரசாங்கங்கள் தமிழ்க்கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்கமறுக்கின்றன.''

### கோப்பாய்வட்டாரத்தில் தமிழ்த்தினவிழா

உரும்பராய், வியாழன்

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் தமிழ்த் தினவிழா இரண்டாம் கவணை ஆரம்பத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே: சண்முகநாதன் கவனித்துவருகிறார்.

### அஞ்சலிக்காக பாடசாலையில் சடலம்

கோப்பாய், வியாழன்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் கனிஷ்ட பிரிவுத் தலைமையாசிரியையாயிருந்து காலமான திருமதி சொலமனின்சடலம் இறுதிக்கிரியைகளுக்கு முன்னர் மேற்படி பாடசாலையில் மாணவர்களதும், ஆசிரியர்களதும் இறுதி அஞ்சலிக்காக சிலமணித்தியாலம் வைக்கப்பட்டிருந்தது.

அன்னாரின் மறைவையொட்டி ஒரு நாள் பாடசாலை விடுமுறைதினமாகவும் அனுட்டிக்கப்பட்டது.

### டட்லியே

தீவுப்பகுதியில்

### தாச்சி சுற்றுப்போட்டி

அல்லைப்பிட்டி, வியாழன்

தேசிய விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் தீவுப்பகுதிதாச்சி சுற்றுப்போட்டியொன்று இம் மாதம் பிற்பகுதியில் நடாத்தப்படவிருக்கிறது. வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்படவிருக்கும் இப்போட்டியில் [illegible]

ரா ஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த

## ஹரிச்சந்திரா

ரா ணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர் (3 வேடங்களில்) விஜயநிர்மலா - பாலையா நடித்த

## சிரித்த முகம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி – சரோஜாதேவி – சௌகார் ஜானகி நடித்த

## புதிய பறவை

வெற்றிகரமான 3 வது மாதம்

கெப்பிட்டல் (கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார், ஏ. வி. எம். ராஜன் மனோரமா மற்றுபலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்

## தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ் ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி நடிந்த

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

## சுபதினம்


செய்யாதிருந்த காரணத்துக்காகவும் 31-3-70இல் நடைபெறவேண்டிய கூட்டத்தில் சமுகம் கொடுத்து மறுமொழி பகரமுடியாமையால் கூட்டத்தை தலைவர் கட்சியும் பகிஷ்கரிந்துள்ளதாக மக்கள் யூகிக்கிறார்கள்.

க. கா. வைத்திலிங்கம்
4-ம் வட்டார அங்கத்தவர்

2202

## கல்விஇலாகாவின் 8 ம் தரப் பரீட்சை

பருத்தித்துறை, வெள்ளி

அகில இலங்கையிலுமுள்ள 8-ம் தர மாணவருக்கான பரீட்சை இன்று கல்வி இலாகாவினால் நடாத்தப்படும். ஆனால் சிலபாடங்களுக்கான வழிகாட்டிக் கைநூல்கள் இதுவரை பல பாடசாலைகளுக்குக் கிடையாமையால் அப்பாடசாலை ஆசிரியரும், மாணவரும் செய்வதறியாது திகைக்கின்றனர்.


ஸ்ரீ காலிங்கன் இணுவில்
Daily 4-45 7 9-45 p. m
Stanley Baker
in
ROBBERY
(Colour)

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Elvis Presley and Machele Carey
in
LIVE A LITTLE LOVE A LITTLE

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Carroll Baker
And
George Maharis
in
SYLYIA
(Color-adults only)
(An exceling Love Story)


உண்டு.

3. தொழில்நுட்பம்: அங்கீகாரம் பெற்ற தொழில் நுட்பப் பாடசாலையில் மின் அமைப்பு பயிற்சி அனுபவம் பெற்றவர்களுக்குமுதன்மை அளிக்கப்பெறும்.

4. விண்ணப்பிப்போர் தங்கள் வேலை அனுபவம், தகுதி, நன்நடத்தை ஆதியனபற்றி இருவரிடம் அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் இணைக்கவேண்டும்.

5. விண்ணப்பங்கள்: ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு 16-4-70க்கு பிந்தாமல் கிடைக்க அனுப்பப்படல் வேண்டும்.

ஆதரவு தேடுவதால்தகுதி இழக்க நேரிடும்.

ஒப்பம்
ஏ. ரி. சுந்தரம்
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்,
மார்ச் 31-1970 2205

## அதிபர் பரீட்சை முடிவு தாமதம் ஏன்?

### 5-ல் ஆராயப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

சிலமாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஆசிரியர் விசேட பதவிகள், 1-ம், 2-ம், 3-ம் தர அதிபர்கள் நேர்முகப்பரீட்சையில் அப்பதவிகளுக்கு இதுவரை நியமனம் பெறுதவர்களின் நிலைபற்றி வடமாகாண ஆசிரியர் சங்கம் ஆராயவிருக்கிறது. இம் மாதம் 5-ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அவசர கூட்டமொன்றில் இதுவிவாதிக்கப்படும்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களிடமிருந்தும், விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்களிடமிருந்தும் 5-ம் திகதிக்கு முதல் விபரங்கள் கோரப்பட்டுள்ளன,

மேயர் திரு. துரைராசா 'றெக்கிளமேஷன்' சனசமூக நிலையத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: 1964-ம் ஆண்டு நான் யாழ்ப்பாண மேயராகப் பதவி வகித்தபோது, யாழ்ப்பாண நகர மின்சாரத்தைப் புதிப்பிப்பதற்காக, கொழும்புக்குச் சென்று மத்திய அரசாங்கத்திடம் ஒரு லட்சம் ரூபாய் பெற்று வந்தேன். இதற்கிடையில் எனது பதவிக் காலம் முடிவடைந்து விட்டதால், அதன் பின் மேயராகப் பதவி வகித்தவர்கள் அப்பணத்தை வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன் படுத்தியதால், மின்சார அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படாது நின்று விட்டன. நான் தற்போது மீண்டும் மேயராக பதவி வகிப்பதால் யாழ்ப்பாண நகர மின்சார வேலைகளை விருத்தி செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றேன், தற்போது மிக மங்கலான மின்சார ஒளியைப் பெறும் குருநகர் மக்கள் மிகவிரைவில் பூரண மின்சார ஒளியைப் பெறுவதற்கானவேலைகள் யாவும் மிகத் துரிதமாகச் செயல்பட்டு வருகின்றன. இவைதவிர இப்பகுதி மக்களின் குடியேற்றத் திட்டங்கள், தண்ணீர் வசதிக் குறைவு, சுகாதாரச் சீர்கேடு ஆகியனவும் புதிப்பித்து அமைக்கப்பட இருக்கின்றன''

றெக்கிளமேஷன் சனசமூக நிலையத்தின் முன்றலில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு, மேற்படி சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. செல்வநாயகம் ஜே. பி. தலைமை வகித்தார்.

இவ்வட்டார மாநகரசபை அங்கத்தவர் டாக்டர் ஏபிரகாம் பேசும் போது இப்பகுதிச் சிறுவர்களுக்கு ஒரு 'சிறுவர் பூங்கா' அமைத்துத் தரவேண்டுமென, மேயரைக் கேட்டுக் கொண்டார்:

மற்றும் இச்சனசமூக நிலையத்தின் காரியதரிசி திரு. சு. மரியதாஸ், உதவி தனாதி

## கூட்டுத்தாபனம்

### வெள்ளி 3—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற் சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணாரிந்தமிழ், 7-45 சித்திரம் 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலி பரப்பு, 5.00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30சிறுவர் விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8 00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10 30 செய்திச்சுருக்கம்.

டுக் கழகத்தினரால் தீவுப் பகுதிதாச்சி சுற்றுப்போட்டியொன்று இம் மாதம் பிற்பகுதியில் நடாத்தப்படவிருக்கிறது. வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்படவிருக்கும் இப்போட்டியில் இருபதுக்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களும், விளையாட்டுக் கழகங்களும் பங்குபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 'நொக்கவுட்' முறையில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகள்யாவும் தீவுப்பகுதியில் நடைபெற்ற தாச்சி சுற்றுப் போட்டியின் சட்ட திட்டங்களை அனுசரித்தே நடைபெறும்.

வைக்கப்பட்டிருந்தது.

அன்னாரின் மறைவையொட்டி ஒருநாள் பாடசாலை விடுமுறைதினமாகவும் அனுட்டிக்கப்பட்டது.

## டட்லியே வருவாராம்

கொழும்பு, வியாழன்

அடுத்த பொதுத்தேர்தலில் திரு. டட்லி சேனநாயக்காகவ பதவிக்கு வருவார் என்று இலங்கையின் பிரபல சோதிடரான சி. ஈ. சி. புலத்சிங்கள ஆருடம் கூறியிருக்கிறார் கடந்த முறையும் இவ்வாறு திரு. புலத்சிங்கள சரியாகவே ஆருடம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## நியமனம்

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு டாக்டர் தனபாலன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று முதல் தமது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# 'சட்டம்பற்றி ஆரம்ப கல்வியில் படிப்பதால் நன்மை உண்டு'

## மாணவர் பற்றி நீதியரசர் வீரமந்திரி

யாழ்ப்பாணம், வெள்ளி

பழைய சட்டங்கள் இன்றும் மாற்றியமைக்கப்படாமல் இருப்பதினால் நீதிமன்றக்காரியங்கள் சிலவற்றைச் செயல்படுத்துவதில் தாமதமாகிறது. உதாரணமாகநீதிமன்றச் செலவுகள் விதியும், அறவிடும்விதியும் அக்காலச் சட்டப்படியே இருந்துவருகிறது.

இவ்வாறு நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி யாழ்ப்பாணம் சட்ட நூலக சங்கக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

திரு. வீரமந்திரி மேலும் பேசியதாவது:

பொதுமனிதன் தேவைப்படி அனேகசட்டங்கள் மாற்றப்படுகின்றன பாடசாலை மாணவர் முக்கியமாக நீதிமன்ற விடயங்களை அறிந்திருக்கவேண்டும்

சட்டத்தைக் கட்டாயமான ஓர் பாடமாக மாணவர் ஆரம்ப அடிப்படை கல்வியின்போது அறிந்துகொள்வது மிகநன்று குடியியலின் ஓர் அங்கமான சட்டநுணுக்கங்கள் மாணவரிடையே புகுத்தப்படுவதால் நன்மைநிறையவரும் அவர்களுக்கு மிகவும் பிரயோசனப்படும்.

நல்ல ஒரு பிரசையாக மாணவன் வாழ ஆரம்ப காலத்து அடிப்படை சட்ட அறிவு கட்டாயம்வேண்டும். நீதிமன்றங்களில் நடைபெறும் முக்கிய செயல்களை பொதுமனிதன் நன்கு அறியச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். பொதுமனிதனின் பிரதிநிதியான வழக்கறிஞர்களும், பொதுமனிதனும்நீதிமன்றத்தை கௌரவப்படுத்த உண்மை, கண்ணியம், பண்பு உடையவர்களாக இருக்கவேண்டும்.

நூலக காரியதரிசி வழக்கறிஞர் ரி. சோமசுந்தரம் பேசுகையில், நீதியரசர் மிகவும் குறைந்த வயதுடையவராயினும், அவர் ஒரு சிறந்த சட்ட நுணுக்கப்பேச்சாளர், சட்டவல்லுனர் என்று கூறினார்.


S. R. S. ஜவுளி மாளிகையில்

புதுவருட மலிவு விற்பனை

குதூகலமாக நடைபெறுகிறது!

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி (போன்: 296) யாழ்ப்பாணம்.

தம்பி அன் கோ

அதிட்ட 1000 ரூபா அல்லது அதிட்ட 500 ரூபாயில் சேர்ந்து விட்டீர்களா?

முழு விபரங்கட்கு போயாதின 'ஈழநாடு' விளம்பரத்தைப் பார்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. எஸ். தேர்தல் விவகாரம்

# "கழகம் விரலசைத்திருந்தால் வெற்றி கிடைத்திருக்கும்"

— கருணாநிதி

திருப்பனந்தாள், ஏப் 2

'எமது கழகம் கொஞ்சம் கையசைத்திருந்தால் திரு. சி. சுப்பிரமணியம் நிச்சயம் வெற்றிபெற்றிருக்கலாம். நாம் மேலதிகமாக எஸ். எஸ். ஆருக்கும் காஞ்சி கல்யாணசுந்தரத்துக்கும் அளித்திருக்கும் வாக்குகளை 32 என்ற அளவில் நிறுத்தி எஞ்சிய வாக்குகளைக்கூட அவருக்குப் போட்டிருந்தால் இந்நேரம் அவர் நிதிமந்திரியாகக்கூட வந்திருக்கலாம்,

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. கருணாநிதி இக்கூட்டத்தில் மேலும் பேசுகையில், 'கடந்த ஆண்டு தாம் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்டபொழுது வங்கிகள் தேசியமயம்பற்றித் தெரிவித்ததாகவும் அப்பொழுது அதைக் கேட்டு விலா அதிரச்சிரித்த மொரார்ஜிதேசாய் இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் போய்விட்டதாகவும் அவருக்கு ஆதரவளித்துப் பேசிய இந்திரா காந்தி கழகம் ஆதரித்ததால்தான் பிரதமராகதப்பி உலாவுவதாகவும் கூறினார்.

## 'எல்லாக் கட்சிகளும் சதிசெய்து என்னைத் தோற்கடித்துவிட்டன'

—சி சுப்பிரமணியம்

சென்னை, ஏப் 2

சுதந்திரா, தி. மு. க. சின்டிகேட் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து சதிசெய்து தன்னைத் தோற்கடித்திருப்பதாக புதுக் காங்கிரஸைச் சேர்ந்த திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் டில்லி மேல்சபைக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற திரு. சி. சுப்ரமணியம் இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் எல்லாமாக 42 வாக்குகள் பெற்று வெற்றிபெறலாம் என்று கருதியேதான் தேர்தலில் இறங்கியதாகவும் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் இடைநடுவே தமது ஆதரவை முறியடித்துக் கொண்டதாலும் கருணாநிதியின் வற்புறுத்தலின்பேரில் தமிழரசுக்கழகம் காலை வாரிவிட்டதாலும் சின்டிகேட் காங்கிரசார் தமது கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி சுதந்திராவுக்கு வாக்களித்ததாலுமே தாம் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்ததாக அவர் கூறினார்.

எப்படியிருந்த போதும் இக்கட்சிகளின் முறைகேடான செயலை மக்கள் உணர்ந்து கொண்டால் அதுவே போதும் எனவும் சுப்பிரமணியம் சொன்னார்.

## சூடான் அரசுக்கெதிராக கிளர்ச்சி செய்த இமாம்

### தப்பியோடமுயன்றபோதுசுட்டுக்கொலை

கார்ட்டும், ஏப்.2

சூடான் அரசுக்கெதிராகக் கிளர்ச்சி நடத்தி அதற்குத் தலைமை தாங்கிய இமாம் அப்துல் ரஹ்மான் அல்மெஹ்தி சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். இதை சூடான் அரசின் தலைவர் நிமெரிதெரிவித்தார்.

கிளர்ச்சிக் காரர்களின் தலைமை இடமாக இருந்த ...ன்றபோது அவர் எல்லைக் காவல் துருப்புக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அரசுத்தலைவர் சொன்னார் எதியோப்பிய நகருக்குள் தப்பிச் செல்ல முயன்றபோதே இமாம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சூடான் அரசுக்கெதிராக நடந்த கிளர்ச்சி நசுக்கப்பட்டுவிட்டது. அபாத்திவு

## சிகானுக் தந்தி

பீக்கிங், ஏப்ரல் 3

கம்போடியாவின் அரசுத்தலைவர் தாமேயென்றும் ஆட்சிமன்றத்துக்கோ வேறு யாருக்கோ தம்மைப்பதவியிலிருந்து நீக்குவதற்கு அதிகாரமில்லையென்றும் இப்பொழுது பீக்கிங்கிலுள்ள இளவரசர் நொரடம் சிகானுக் ஐ. நா. தலைமைக்காரியதரிசி யூதாண்டுக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் தெரிவித்திருக்கிறார்.

சிதம்பரத்தில்

## சினிமாக் கொட்டகை தீக்கிரை

சிதம்பரம், ஏப்ரல். 2

சிதம்பரம் நகரசபைஉறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான சினிமாக் கொட்டகையொன்று திடீரெனத் தீப்பற்றியெரிந்து சாம்பலாகியது.

ஓலையால் வேயப்பட்ட இக் கொட்டகையில் நள்ளிரவு இரண்டாவது காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது பின்புறத்தில் தீப்பற்றியது. இதைக்கண்டதும் ரசிகர் கூட்டம் தப்பித்தோம் பிழைத்தோமென்று தலைதெறிக்கஓடித்தப்பியது சிதம்பரம் தீயணைக்கும் படைக்கு தெரிவிக்கப்பட்டு அவர்கள் வந்து சேருவதற்குள் தியேட்டர் முழுவதும் எரிந்து சாம்பலாகிவிட்டது.

சினிமா காட்டும் எந்திரங்கள் திரை, நாற்காலிகள் உட்பட ரூபா 75000 க்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## கொலையாளியை கண்டுபிடிப்பவர்க்கு ரூபா 2000

பாட்ணு, ஏப்ரல். 2

இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவராகிய ஜோதிபாசுவைச் சுட்டதாகக்கருதப்படும் மர்மமனிதனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபா 2000 பரிசளிக்கப்படுமென பீகார் மாநிலத் தலைமைப் பொலிசார் தெரிவித்

'அடுத்த பொதுத்தேர்தலில்

## 30 ஸ்தானத்துக்கு மேல் யு. என். பி. வரமுடியாது'

— ஆர். எஸ். பெரேரா

கெலனியா, வியா.

'ஐக்கிய தேசியக் கட்சி எவ்வளவுதான் முயன்றாலும் வருகிற தேர்தலில் 30 ஸ்தானங்களுக்கு மேல் வெற்றியீட்டாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வருகிற முறை சுலபமாகப் பல தொகுதிகளில் வெற்றியீட்டும்'

இவ்வாறு கெலனியா முன்னாள் எம். பி. திரு. ஆர். எஸ். பெரேரா கொட்டடெனியா என்னுமிடத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். டிவிலுப்பிட்டிய தொகுதியில் போட்டியிடவிருக்கும் திரு. லஷ்மன் ஜெயக்கொடியை ஆதரித்து இக்கூட்டம் நடைபெற்றது.

கடந்த 5 வருட காலத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நாட்டில் என்ன செய்தார் என்றே தெரியவில்லை. நாம் வருகிற முறை ஆட்சிக்குவந்தால் இவற்றை எல்லாம் நிவர்த்தி செய்வோம் என்றும் திரு. ஆர். எஸ். பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

திரு. லஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது:-

வருகிற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பதவிக்குவந்தால் கூப்பனுக்கு இரண்டு படி அரிசி வழங்க நாம் தயாராயுள்ளோம். தற்போது அரிசி வெட்டப்பட்டு இலவசமாக கொடுக்கப்படுவதினால் ஏனைய பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது' இதை மக்கள் உணரவேண்டும்.

திருவாளர்கள் சந்திரபாலாஜெயவர்த்தன, நாரத ஜெயக்கொடி, எச். வல்பிட்ட, என். கே. எஸ். அப்புகாமி, டி. எஸ். விஜயவர்த்தன ஆகியோரும் பேசினர்.

## 'ஜனநாயகத்தை யு. என். பி.யே காப்பாற்ற வேண்டும்'

— ஸ்ரீமாவோ

குருநாகல், வியா

'ஐக்கிய தேசிய கட்சியினரே நாட்டின் தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டும். மார்க்ஸிய பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு ஜனநாயகத்திற்குப் பங்கம் விளைவிக்க இவர்கள் முயலுகின்றனர் என குருநாகலில் நடைபெற்ற ஸ்ரீ.ல.சு. கட்சிப் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

உணவு உற்பத்தி இயக்கத்தில் வெற்றிகண்டதாகக் கூறிக் கொள்ளும் பிரதமர், கூப்பனுக்கு 2 கொத்து அரிசி வழங்கமுடியாமல் இருக்கிறார். மகாவலி திட்டமூலம் பிரதமர் இலங்கையை வேறு ஒருநாட்டிற்கு விற்றுவிட்டதற்காகவே நாம் இத்திட்டத்தை எதிர்க்கின்றோம். யூ. என். பி. நினைப்பது மாதிரி நாம் தேர்தல் தந்திரமாகஇதைக் கணிக்கவில்லை. வருகிறமுறை நாம் பதவிக்குவந்தால் 2 கொத்து அரிசிவழங்க எங்களால் முடியும் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

அல்ஹாஜ்பதியூன்மஹ்மூத் பேசுகையில் கூறியதாவது:

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் மாவட்டசபை மசோதா மீண்டும் வரும் இதை தமிழரசுக்கட்சி கட்டாயம் வற்புறுத்தும். கடந்ததேர்தலில் ஐ. தே. கட்சியை ஆதரித்த முஸ்லிம்கள், கத்தோலிக்கர் இம்முறை ஸ்ரீ.ல.சு. கட்சியையே ஆதரிப்பர் என்றார்.

திரு. ஆர். எஸ். பெரேரா பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உட்படபலர் பேசினர்.

## ஐக்கியம் பற்றி பேசுபவர்கள் மார்க்ஸியவாதிகளுடன் சினேகம் பூண்டுள்ளனர்

—போக்குவரத்துஅமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் வாசகர்கள் தொகை வளர்ந்துள்ளது

### பிரிட்டிஷ் புத்தக கவுன்சில் கருத்து

லண்டன், ஏப் 2

இலங்கையில் வாசகர்கள் தொகை வளர்ந்து வருவதாகவும் புத்தகபாவனையில் நாடு முன்னேற்றம் கண்டு வருவதாகவும் பிரிட்டிஷ் புத்தக அபிவிருத்தி கவுன்சில் தனது அறிக்கையில் பாராட்டுத் தெரிவித்திருக்கிறது.

பிரபல பிரிட்டிஷ் பிரசுரிப்பாளரான திரு. ஜோன் அட்டன்பரோ தலைமையில் கடந்த நவம்பர் மாதம் பிரிட்டிஷ் புத்தக அபிவிருத்தி கவுன்சில் தூதுகோஷ்டி ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்ததைவாசகர்கள் அறிவார்கள் இத்தூதுகோஷ்டியினர் இலங்கையின் புத்தக தேவைகளை ஆராய்ந்து சென்றனர்.

இலங்கையின் ஜனத்தொகையில் 83 விகிதமானோர் படிப்பறிவுடையவர்கள். அத்துடன் இங்குஉயர் கல்விக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஆகையால் இந்நாட்டில் புத்தக விற்பனைக்கான சந்தை மேலும் வளருமென்பதில் சந்தேகமில்லை என்று திரு. ஜோன் அட்டன்பரோ மேற்படி அறிக்கையின் முகவுரையில் குறிப்பிட்டிருக்கிறார் இலங்கைக்குபெருந்தொகையான நூல்களை ஏற்றுமதி செய்யும் நாடு பிரிட்டன்தான் என்று குறிப்பிடும் அவர் இலங்கையில் புத்தக தேவைகளுக்கு விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் கோரியிருக்கிறார்.

பிரிட்டிஷ் புத்தக அபிவிருத்தி கவுன்சில் தனது அறிக்கையில் இலங்கை அரசாங்கத்திற்கும் இங்குள்ள வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் பல சிபார்சுகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்திருக்கிறது.

தேவையான நூல்களைப் பெற முடியாது தவிக்கும் மாணவர்களின் கஷ்டங்களை போக்கும் பொருட்டுஉரிமை பெற சில நிறுவனங்களுக்கு புத்தகங்களை 'பீக்ஸ்' தவிர்ந்த விலைகளில் இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும். அந்நிய செலாவணியைக் குறைக்கும் பொருட்டு உளநாட்டுப் புத்தக விற்பனையாளர்கள் மூலம் இறக்குமதி கோரிக்கைகள் அனுப்பப்பட வேண்டும், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக விருத்தியடையச் செய்வதற்கு சிறுவர்களுக்கான ஆங்கில நூல்கள் போதுமான அளவு ஆரம்ப பாடசாலை வாசிகசாலைகளில் சேமித்துவைக்க வேண்டும்'' இது போன்ற சிபார்சுகள் இலங்கை அரசாங்கத்திற்கு செய்யப்பட்டிருக்கின்றன.

'பீக்ஸ்' தவிர்ந்த விலைகளில் நூல்களை பெறும் பொருட்டு இலங்கை புத்தக விற்பனையாளர் சங்கம் ஒரு கூட்டுறவு இறக்குமதி நிலையத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றும், பாடப்புத்தகங்களை பக்கங்களாக இறக்குமதி செய்து பின் புத்தகங்களாகக் கட்டலாமென்றும் இவ்வறிக்கையில் மேலும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

0 0

## வன்னிநாட்டின் நிலை அன்றும் இன்றும்

### முன்னாள் எம். பி. கூறுகிறார்

முல்லைத்தீவு, வியாழன்

"என்னைச் சென்ற மூன்று தேர்தல்களிலும் பெரும்பான்மை வாக்குகளால் உங்கள் பிரதிநிதியாக்கினீர்கள். நானும்எனது நாட்டின் அபிவிருத்திக்கும் இனத்துக்குமானதைச் செய்தேன். 1960க்கு முன்புஎமதுவன்னி நாடு இருந்த நிலை என்ன இன்றுள்ள நிலையென்ன என்பதைச் சற்று சிந்திப்போமானால் எமக்கு உண்மை விளங்கும். நான் மீண்டும் உங்கள் முன்னிலையில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்ச... பரம் ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டபின் நேற்று முன்தினம் குமுளமுனைக்குச் சென்றபோது அங்கு அவருக்கு அவ்வூர்மக்களால் செய்த வரவேற்புபசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. தா. சிவசிதம்பரம் குமுளமுனை நுழைவாசலை அடைந்தபோது கரிக்கட்டுமூலை மேற்குக் கிராமசபைத் தலைவர் திரு. ந. குமாரசுவாமி தலைமையில் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். வாலிபர்கள் பலர்


## 'வறிய மக்களுக்காக உழைத்தவர்'

பருத்தித்துறை, வியா.

''சைவத்திற்கும் தமிழுக்கும் மறைந்த திரு. இராசரத்தினம் ஆற்றிய தொண்டுமூலம் வறுமையுடன் போராடிக்கொண்டிருந்த பல ஏழைக்குடும்பங்களும் வாழவழி ஏற்பட்டது' திடசித்தமும், எதிர்ப்பைக்கண்டு அஞ்சாமையும், இளகிய நெஞ்சமும் அவருக்கே உரிய தனிப்பண்புகள். எக்காலகட்டங்களில் இவ்வித பெரியார்களின் உதவி தமிழினத்திற்குத் தேவைப்படுகிறதோ அக்கட்டத்தில் மரணம் சதி செய்துவிடுகிறது.

இவ்வாறு நாவற்காடு மகாவித்தியாலய அதிபர் திரு. கே. வீரகத்தி, கரவெட்டி வாணி கலைக்கழகத்தில் அமரர் திரு. இராசரத்தினத்தின் மறைவு குறித்து நடந்த கூட்டத்திற் கூறினார். பண்டிதர் திரு. பொன் கணேசன் தலைமையில் நடந்த இவ்விரங்கற் கூட்டத்தில் திருவாளர்கள் பீ. சின்னத்தம்பி, எஸ். கந்தப்பு ஆகியோரும் பேசினர்.

இதோ!
ரேமியா
பரவசமூட்டும்
ஓர் புதிய
பவுடர்!



இமாம் அப்துல் ரஹ்மான் அல்மெஹ்தி சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். இதை சூடான் அரசின் தலைவர் நிமெரிதெரிவித்தார்.

கிளர்ச்சிக் காரர்களின் தலைமை இடமாக இருந்த அபாத்தீவு அரசபடைகளிடம் வீழ்ச்சியடைந்ததும் அங்கிருந்து தப்பி ஓடமுய எதியோப்பிய நகருக்குள் தப்பிச் செல்ல முயன்ற போதே இமாம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சூடான் அரசுக்கெதிராக நடந்த கிளர்ச்சி நசுக்கப்பட்டுவிட்டது. அபாத்தீவு மக்கள் அரசபடைகளிடம் சரணடைந்தனர்.

# கம்போடிய ஊடுருவல் கூற்றுக்கு ஹனோய் மறுப்பு

நாம்பென், ஏப். 3

பல்லாயிரக் கணக்கான வியட்காங்கியர் கம்போடியாவுக்குள் ஊடுருவியிருப்பதாக கம்போடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடவியட்நாம் துருப்புக்களும் வியட்காங்கியரும் கம்போடியாவுக்குள் ஊடுருவுவதாகக் கூறப்படுவதை வடவியற்நாம் வானொலி மறுத்தது. கம்போடியாவின் சுயாதிபத்தியத்தை வட வியட்நாம் அங்கீகரிப்பதாக அது கூறியது.

கம்போடியாவுக்குள் வட வியட்நாமியரும் வியட்காங்கியரும் ஊடுருவல் செய்வதாகச் சொல்லப்படும் புகார், அமெரிக்க தலையீட்டை மேலும் மேலும் அதிகரிப்பதற்காகத் தான் என்றும் ஹனோய் வானொலி தெரிவித்தது.

## இ. தி. மு. க.வையும் அரசியற்கட்சியாக அங்கீகரிக்கவும்!

கொழும்பு, வியா.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழகத்தையும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ளும்படி கோரி தேர்தல் மா அதிகாரிக்கு, இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. பூ. ஆ விசாகரத்தினம் விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்.

1948-ம் ஆண்டு தொடக்கம், இ. தி மு. க. செயல்பட்டு வந்திருப்பதாகவும், எனவே இ. தி. மு. க.வை சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று திரு. விசாகரத்தினம் தனது கடிதத்தில் வற்புறுத்தியுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் உத்தியோக பூர்வமான வேட்பாளர்களுக்குக் கட்டுப்பணமாக ரூபா 250 தான் செலுத்தவேண்டும்; ஏனைய வேட்பாளர்கள் 1000 ரூபா கட்டுப்பணம் செலுத்தவேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ச. ச. நிலைய மூலம் கிராமங்கள் சிறப்புறும்

தாவடி, வியாழன்

"கிராம மக்களை, சமூகத்தை, சன சமூக நிலையங்கள் மூலம் சிறப்புறத் திகழச்செய்யலாம். வருங்காலத்திலே அரசாங்கத்தையோ அன்றிப் பொது ஸ்தாபனங்களையோ நம்பி நாம் வாழக் கூடாது. சுயமாகப்பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும். சன சமூக நிலையங்கள் மூலம் விளையாட்டுக் கழகங்களையும் உருவாக்குதல் சிறப்புடையதாகும்"

இவ்வாறு. தாவடி ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழக நிதிக்காக வழங்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டைப் பெற்று, விற்பனையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் உடுவில் தொகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

கணேச வாசிகசாலைமண்டபத்தில், இளைப்பாறிய டாக்டர் திரு. கு. தம்பையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம், உபதலைவர் திரு. செ. இராசதுரை, திரு. சி. த. நடராசா தலைமையாசிரியர் திரு.வி.இராசசிங்கம், திரு. சி. செல்வரத்தினம் ஆகியோரும் பேசினார்கள்.

## பிள்ளையார் உற்சவம்

அனலைதீவு, வியா.

அனலைதீவு பெரியபுலம் சங்கரநாதர் கணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

புதுவருடப் பிறப்பன்று தேர்திருவிழா நடைபெறும் திருவிழாக்களுக்கு விசேட கூட்டுப்பிராத்தனைகள் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ராகிய ஜோதிபாசுவைச் சுட்டதாகக்கருதப்படும் மர்மமனிதனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபா 2000 பரிசளிக்கப்படுமென பீகார் மாநிலத் தலைமைப் பொலிசார் தெரிவித்திருக்கின்றனர். இவர்கள் மத்திய பொலிசார் மேற்குவங்கப் பொலிசாரின் ஒத்துழைப்புடன் இச்சூட்டுச் சம்பவம் பற்றி புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## குழந்தைக்கு நெல்லின்பெயர் வைக்கப்பட்டது

வேலூர், ஏப், 2

இப்பகுதியிலுள்ள ஒரு விவசாயி தன்னுடைய பத்து மாதக் குழந்தைக்கு ஐ. ஆர். 8 என்ற நெல்லின் பெயரை வைத்துள்ளார்,

குறைந்த காலத்தில் நிறைந்த விளைவைத் தரக்கூடிய இந்த நெல்லைப்போல் தனது குழந்தையும் தக்க காலத்தில் தக்க பயனை தரவேண்டுமென்று கருதி அதற்கு இப்பெயரை வைத்திருப்பதாக அவ் விவசாயி கூறுகிறார்,

## தேர்த் திருவிழா

தாவடி, வெள்ளி

தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய தேர் வெள்ளோட்டவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

## பாடத்திட்ட மாற்றத்துக்கு ஆட்சேபம்

கோப்பாய், வியாழன்

"கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்வகுப்புக்கான புதியபாடத்திட்டம் சைவ மாணவர்களை பெரிதும் பாதிப்பதாக அமைந்துள்ளது. ஆரம்பக்கல்வி தொடக்கம் சைவசித்தாந்த கல்வியைப் பெற்றுவரும் மாணவர்களை இப்புதியதிட்டம் சிறப்பாக சைவ சமயத்தையும் சைவசித்தாந்தத்தையும் புறக்கணிப்பதாகவுள்ளது. எனவே புதிய பாடத்திட்டத்தை தடைசெய்து இதுவரை இருந்து வந்த பாடத்திட்டத்தை அமுல் நடத்துக."

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரின் விசேஷ கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானப் பிரதிகள் கல்வி அமைச்சு, பிரதமர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மார்க்ஸியவாதிகளுடன் சினேகிதம் பூண்டுள்ளனர்

—போக்குவரத்து அமைச்சர்

கோட்டை வியா

'நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றத் தங்களால்தான்முடியும் என்று கூறிக் கொள்ளும்ஸ்ரீமாவோ தலைமையிலான ஸ்ரீ. ல. சு. கட்சி மார்க்ஸிய வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டிருப்பது வேடிக்கையானது எனபோக்குவரத்து அமைச்சர்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். சிரவஸ்திரபுரத்தில் புகையிரத நிலையமொன்றைத் திறந்து வைத்து அமைச்சர் பேசினார்.

திரு.ஹுருள்ளே மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஸ்ரீமாவோ அரிசிவெட்டை மீண்டும் தருவதாகக் கூறிக் கொள்ளுகிறார். இது அரிசியை இறக்குமதி செய்வதாலோ அல்லது மக்களிடமுள்ள மேலதிக அரிசியை சட்டத்தின்மூலம் பலவந்தமாகப் பறித்தோதான் செய்யமுடியும். இது விவசாயிகளைப் பாதிக்கச்செய்யும் செயல். இதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். அரிசி வெட்டியதன் மூலம் நாட்டில் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கக் கூடியதாக விருந்தது.

தேசிய ஐக்கியம்பற்றிப் பேசிக் கொள்ளும் ஸ்ரீ. ல. சு கட்சியினர், முன்னர் பதவியிலிருந்த காலத்தில் நாட்டின்பிரதமர் வடக்குகிழக்கு மாகாணங்களில் காலடி எடுத்து வைக்க முடியாமல் இருந்தது. அந்த நிலை இப்பொழுதுமாறி, தேசிய அரசாங்கத்தின் பிரதமரும், அமைச்சர்களும் நாட்டின் சகல பகுதிகளுக்கும் செல்லக் கூடியதாகவிருந்தது.

# "மாணவரைத் தண்டிக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு"

உடுப்பிட்டி, வியாழன்

'தமிழர்களோடு தமிழ் எவ்விதம் பின்னிப் பிணைந்து ஒன்றையொன்று தழுவி நிற்கின்றதோ, அது போலவே சைவமும் தமிழோடு பிணைந்துள்ளது. சைவத்தை வளர்க்கும் முகமாக நாயன்மார்களாலும், அடியார்களாலும் பாடப்பட்ட தேவார திருவாசகங்கள் தமிழின் பெருமையை உயர்த்தியுள்ளன'.

இவ்வாறு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி புலோலி மேற்குதமிழ் ஆண்கள் பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் 'சைவமும் தமிழும்' என்னும் தலைப்பில் பேசுகையில் கூறினார்:

பண்டிதர் திரு மு.பொன்னையா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. இலங்கைவங்கி பருத்தித்துறைக் கிளை மனேஜர் திரு வி.எஸ். கந்தப்பு பேசுகையில், ஒரு பிள்ளையைத்தண்டிக்க பெற்றாருக்கு எவ்வளவு உரிமையுள்ளதோ அவ்வளவு உரிமை மாணவர் விஷயத்திலும் ஆசிரியருக்கு உண்டு. பிள்ளை தவறான வழியில் சென்றால் அதற்கு ஆசிரியர்களைக் குறை கூறுவது கூடாது. ஆசிரியர்கள் குறிக்கப்பட்ட நேரம் மட்டுமே பிள்ளைகளின் கல்வியிலும், பழக்க வழக்கங்களிலும் பங்கு கொள்ள முடிகிறது. ஆனால் பெற்றோர் பிள்ளை பிறந்தது முதல் பழகிவருபவர்கள் நல்ல பழக்க வழக்கங்களைப் புகட்ட வேண்டியது பெற்றரின் தலையாய கடமையாகும்', என்று கூறினார்.

தலைமையாசிரியர் திரு மா. சுப்பிரமணியம் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

பெற்றார் ஆசிரியர் சங்க நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

போஷகர்: திரு ஆ நாகலிங்கம்பிள்ளை, தலைவர்: திரு. மு பொன்னையா, உபதலைவர்: திரு வே க கந்தையா, காரியதரிசி: திரு வ சபாபதிப்பிள்ளை, உப காரியதரிசி திரு ப க. ஆறுமுமம், தனாதிகாரி: திரு தி வரதகணபதிப் பிள்ளை, உபதனாதிகாரி: திரு. ஆ நடேசன்.

ஒன்பது பேரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## சமயறிவுப்போட்டி

கோப்பாய், வியா

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் நான்காவது சமயஅறிவுப் போட்டி வெளியீடு இம்மாதம் 17-ம் தேதி கோப்பாய் வீரபத்திர சுவாமிகோவில் மண்டபத்தில் நடைபெறும்.

நாடு இருந்த நிலை என்ன இன்றுள்ள நிலையென்ன என்பதைச் சற்று சிந்திப்போமானால் எமக்கு உண்மை விளங்கும். நான் மீண்டும் உங்கள் முன்னிலையில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகனாக வந்துள்ளேன்."

இவ்வாறு வவனியா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு, தா. சிவசிதம் பரம் குமுளமுனை நுழைவாசலை அடைந்தபோது கரிக்கட்டுமூலை மேற்குக் கிராமசபைத் தலைவர் திரு. ந. குமாரசுவாமி தலைமையில் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். வாலிபர்கள் பலர் திரு. கே. நவரத்தினம் தலைமையில் இரத்தத்தினால் திரு. சிவசிதம்பரத்துக்கு திலகமிட்டு மலர்மாலைகள் சூட்டினர்.

# ஆறுமாதத்துக்குள் 25000 பேர் தாயகம் திரும்புவார்கள்

கொழும்பு, வியாழன்

இந்திய பிரஜாவுரிமை பெற்றுள்ள சுமார் 25000 தோட்டத்தொழிலாளர்கள் அடுத்த ஆறுமாதங்களுக்குள் இந்தியாவுக்கு புறப்பட்டுச்செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக குடிவரவு குடிஅகல்வு இலாகா அறிவிக்கின்றது. ஏப்பிரல் மாதம் இறுதி வாரத்தில் இவர்கள் குடிபெயர்வது ஆரம்பமாகும் என்றுதெரிகின்றது.

1964-ல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான தற்குப்பிறகு70,000இந்திய வம்சாவளியினர் இந்திய ஹைகமிஷனிடம் இந்தியப் பிரசைகளாகப் பதிந்து கொண்டிருக்கிறார்கள் இவர்களின் முக்கால் பகுதியினர் இந்தியா திரும்பிவிட்டதாகத் தெரிகின்றது. ஒப்பந்தத்தின்படி வருடத்துக்கு 35,000 பேர் வீதம் 525000 பேர் இந்தியாவுக்குப் போயாகவேண்டும். ஆனால், சேமலாப நிதி, செலாவணி பட்டுவாடா போன்றவற்றில் ஏற்பட்ட தடங்கல்கலால் இவர்கள் தாயகம் திரும்புவதில் தாமதம் ஏற்பட்டுவந்தது.

இவ்வருடம் தாயகம் திரும்பவிருக்கும் 25000 பேரில் அப்புத்தளைப்பகுதியிலிருந்து 7,500 பேரும் பண்டாரவளை பகுதியிலிருந்து 6,200 பேரும். பதுளையிலிருந்து3300 பேரும், பசறையிலிருந்து 3000,பேரும் சொரணதொட்டை யிலிருந்து 3,000 பேரும் அடங்குவார்கள். சி. பி. ஏ.

## ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

உரும்பிராய், வியாழன்

'மொழி வளர்ச்சிக்குரிய பயிற்சி வகுப்புகளை அரசாங்கம் பல இடங்களிலும் நடாத்திவருகிறது. கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திர சாதாரணவகுப்புகளில்தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குரிய பயிற்சி வகுப்புகளைச் சென்ற ஆண்டில் நடத்தியதன் மூலம் பெரும் நன்மை கண்ட அரசாங்கம் இந்த ஆண்டில் இரண்டாம்முறையாக இப்பயிற்சி வகுப்பை நடத்துகிறது. இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் தங்கள் வட்டார ஆசிரியர்களைக் கூட்டித் தாம் இப்பயிற்சி வகுப்பில் கற்றுக்கொண்டதைத் தெரிவிப்பதன் மூலம் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திர வகுப்பு மாணவர்கள் நன்மையடைவார்கள்

கனிஷ்ட பொதுத்தராதரப் பத்திர வகுப்புகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை ஆரம்பித்துவைத்துப் பேசிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. சி. தணிகாசலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

சென்ற செவ்வாய்க்கிழமை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வித்தியாரத்தினம் திரு. சோ, நடராசன் ஆரம்ப உரைநிகழ்த்தினார்.

'ஒவ்வொரு ஆசிரியரும் மொழிகற்பிக்கும் ஆசிரியரே என்ற தலைப்பில் திரு. அ. வி. மயில்வாகனமும், க. பொ. த. வகுப்புத் தமிழ் மொழிப்பாட ஒழுங்குபற்றி திரு. த, கனகரத்தினமும், விவேகபூர்வமான வாசிப்பு என்ற தலைப்பில் திரு. க சிகுலரத்தினமும், ஆக்க எழுத்தைச் சீர் திருத்தும்முறை திரு. கே நிசங்காவும் உரையாற்றினர்.

## 30 ஆண்டு சேவை

பருத்தித்துறை, வியாழன்

திருகோணமலை இலங்கை அரசகடற்படை நீர் விநியோகப்பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய மேற்பார்வையாளர் திரு. தில்லையம்பலம் கனகரத்தினம் கடந்த மாதத்துடன் ஓய்வு பெற்றார்.





பசுமையும், நீடிக்கும் சுகந்தமும கொண்ட ரோமியா விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.

மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரோமியா சூடுக!

சிறப்பறிய, இன்றே ஒரு டின்

ரோமியா

வாங்குக!

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை ரூ 2/10.

ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணி வாக்கு**

மனிதனின் அருமைபெருமைகளெல்லாம் அவனுடைய செல்வத்தில் இல்லை, அவன் ஆற்றும் பணியில்தான் தங்கியிருக்கின்றன. — ஷேக்ஸ்பியர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம்
21-ந் திகதி (3-4-70)

## உர உற்பத்தி

இலங்கையில் ரசாயன உரஉற்பத்தி ஆலையொன்று நிறுவப்படவிருக்கிறது. வெளிநாட்டு நிறுவனமொன்றிடம் இந்த ஆலையை அமைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படும், எந்தநாட்டு நிறுவனமென்பதுதான் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை இதே சமயம் இங்கு ரசாயன உர உற்பத்தி ஆலையை இலங்கையும் இந்தியாவும் கூட்டுமுயற்சியாக நிறுவலாமென்று இந்தியா யோசனை கூறியிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது நல்ல யோசனை. செயல்படவேண்டும்.

இந்தியாவில் ரசாயன உரம் உற்பத்திசெய்யப்படுகிறது. நாட்டின் உரத்தேவையில் பெருமளவு அங்கே உற்பத்தியாகும் உரத்தினால் நிறைவாக்கப்படுகிறது. நமது நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கென பெரும் முயற்சி செய்யப்படுகிறது, இந்த முயற்சியில் பெருமளவில நாடு வெற்றி கண்டிருக்கிறது. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு உரம் மிகமிக அவசியம். வெளிநாடுகளிலிருந்துதான் இப்போது நமக்குத் தேவையான உரம் இறக்குமதி செய்யப்படுகிறது. உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நமக்கு கிடைக்கும் லாபத்தில் ஒருபகுதி உரம் இறக்குமதிசெய்வதில் போகிறது. நமது நாட்டில் உரத் தொழிற்சாலைகளை நிறுவுவதை பெரிய அரசுகள் விரும்பமாட்டாது. உரத்தொழிற்சாலைகள்நிறுவினால் ஏற்றுமதியைப் பாதிக்கும்.

இந்தியாவில் எண்ணை வளம் கண்டுபிடிக்கப்பட்டு பெட்ரோலியம் மற்றும் பொருள்களையும் உற்பத்தி செய்ய முன்வந்தபோது பெரியநாடுகள் அதற்கு இடையூறுவிளைக்க முனைந்தன. ஆனாலும் அந்த இடையூறுகளையெல்லாம் தகர்த்து இந்தியா எண்ணை உற்பத்தியில்தீவிரமாக ஈடுபட்டு இன்று ஓரளவுசுயதேவையை பூர்த்தி செய்திருக்கிறது. பெட்ரோலியப் பொருள்கள் மட்டுமல்லாமல் ரசாயன உரமும் கழிவுப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு நமது நாட்டில் எண்ணைப் படிவங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது- பிரஞ்சு நிபுணர்கள் இங்கு வந்து வடபகுதியில் பல இடங்களிலும் ஆராய்ச்சி செய்தனர். தொடர்ந்து முயற்சிகள் நடைபெறுவது தெரியவில்லை. மன்னார், புங்குடுதீவு ஆகிய இடங்களில் எண்ணைப்படிவங்கள் இருப்பதாகவும் இங்கு நல்ல ரக எண்ணை உற்பத்திசெய்ய முடியுமென்றும் கூறப்படுகிறது.

எண்ணை உற்பத்திக்கோ, உரஉற்பத்திக்கோ வல்லரசுகள், பெரிய நாடுகள் ஆகியவற்றின் உதவி கிடைக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை.

இந்தியா வல்லரசுகளின் இடையூறுகளைச் சமாளித்து இதில் வெற்றிகண்டிருக்கிறது. அதன் அனுபவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு இந்தியாவே முன்வந்து கூட்டுமுயற்சியாக இங்கு உரத்தொழிற்சாலை ஆரம்பிக்கலாமென யோசனை கூறியிருக்கிறது இது நல்ல சந்தர்ப்பம். உரஉற்பத்தி ஆலை மட்டுமல்ல எண்ணை உற்பத்திக்கும் கூட இந்தியாவின் உதவியுடன் இலங்கை முயற்சிசெய்து அரசியல் மற்றும் காரணங்களை ஒருபுறம் வைத்துவிட்டு நாட்டில் இடைக்கக்கூடிய மூலப்பொருள்களைக் கொண்டு திட்டமிட்டமுறையில்தொழிற்சாலைகளை நிறுவவேண்டியது அவசியம்.

## நடுவூர்ப்பழுத்த நன்மரம்



சைவ தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஊர்கள் தோ

# சுயேச்சை வேட்பாளர்களும் பொதுத் தேர்தல்களும்

தேர்தல் காலம் நெருங்க, நெருங்க தொகுதிக்குத் தொகுதி சுயேச்சை வேட்பாளர்களின் ஆரவாரமும் அதிகரித்து வருகிறது. 'மதில் மேற் பூனை' என்று பலரால் பல சந்தர்ப்பங்களில் பலவிதமாக வர்ணிக்கப்பட்ட சுயேச்சை வேட்பாளர்கள் அரசியற் காற்று எந்தப் பக்கம் பலமாக வீசுகிறதோ அந்தப் பக்கம் சாய்ந்து விடுபவர்கள்.

1947-ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின் முதன்முதல் இலங்கையில் பொதுத்தேர்தல் நாடெங்கும் நடாத்தப்பட்டபோது எல்லாத் தொகுதிகளிலும் சுயேச்சை வேட்பாளர்கள் பலர் 'நான் முந்தி, நீ முந்தி' என்று தேர்தலில் குதித்தனர். கட்சி அரசியல் அவ்வளவாக முதிர்ச்சியடையாத அந்தக் காலக் கட்டத்தில் இது ஆச்சரியமாக இருக்கவில்லை.

1965ல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது சுயேச்சை வேட்பாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகிவிட்டது. கட்சிக் கொள்கைகளை அடிப்படையாக வைத்து இருவேறு அணிகளுக்கு இடையில் உக்கிரமாகப் போராட்டம் நடந்த வேளையில் இந்தச் சுயேச்சையாளர்கள் இருந்த இடம் தெரியாது மறைந்துவிட்டனர். கட்சி அரசியஸ்திரத்தன்மைக்கும், நாட்டின் அரசியல் வாழ்விற்கும் சுயேச்சையாளர்களின் இந்த 'மறைவு' வெகுவாக உதவிய காரணத்தால் அனைவரும் வரவேற்றனர்.

ஆனால் எதிர்வரும் தேர்தலில் மீண்டும் இந்த அரசியற் காளான்கள் தோன்றுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

### உள்ளூராட்சி மன்றங்கள்

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களைக் கவனத்திற் கொண்டு பார்த்தோமேயானால் 62 உள்ளூராட்சி அமைப்புகளுக்காக 605 வட்டாரங்களில் நடைபெற்ற தேர்தல்களில் மொத்தம் 198 வட்டாரங்களைச் சுயேச்சையாளர்களே கைப்

சுயேச்சையாளர்களின் முக்கியத்துவமும், மதிப்பும் பெருமளவு குறைந்துவிட்டது. 1956 தேர்தலில் போட்டியிட்ட மொத்த வேட்பாளர்கள் 241 பேர். இதில் சுயேச்சையாளர்களோ 64 பேர் தான். வெற்றிபெற்ற சுயேச்சை வேட்பாளர்களின் எண்ணிக்கையோ எட்டுக்குள் தங்கிவிட்டது.

1960 மார்ச் மாதத்தில் குழப்பகரமான அரசியல் சூழ்நிலையில் பொதுத்தேர்தல் நடைபெற்றபோது மீண்டும் சுயேச்சையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதைத் தொடர்ந்து நாட்டு அரசியல் வானில் நிலவிய ஸ்திரமற்ற நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள நினைத்ததோடு மட்டுமல்லாது ஆட்சிமன்ற ஆசனங்களின் தொகையும் 151ஆக அதிகரித்ததும். சுயேச்சைவேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததற்கு முக்கிய காரணமாகும்.

மொத்தமாகப் போட்டியிட்ட 887 வேட்பாளர்களில் 167 பேர் சுயேச்சை வேட்பாளர்கள் இந்தப் பொதுத் தேர்தலின்போதுதான் திரு. டபிள்யு தஹநாயக்காவின் லங்கா பிரஜாதந்திர கட்சியும், லங்கா சமசமாஜகட்சியும் தனித்தனியே 101வேட்பாளர்களையும் திரு பிலிப் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி 89 வேட்பாளர்களையும் நிறுத்திய காலம். வாக்காளப் பெருமக்களே இந்த அரசியற் கட்சிகளின் அபிலாஷைகளுக்கும் சுயேட்சை வேட்பாளர்களின் மனக்கோட்டைகளுக்கும் மரண அடி கொடுத்தனர். மொத்தம் 160 கட்சி சார்பற்ற வேற்பாளர்கள் மண்ணைக் கவ்வினர். பெரும்பாலோர் கட்டுப்பணத்தையும் இழந்தனர்.

1960 மார்ச் பொதுத் தேர்தலில் மக்கள் கற்றுக் கொடுத்த பாடத்தால் 1960 ஜூலையில் நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 39 வேட்பாளர்களே போட்டியிட்டனர் அவர்களுள் 6 சுயேட்சையாளர்களே இறுதியில் வெற்றி பெற்றனர்.

1965 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 492 வேட்பாளர்களில் 96 பேர் சுயேச்சை வேட்பாளர்களே. எனினும் இறுதியில் 6 வேட்பாளர்கள்தான் ஆட்சிமன்றத்திற்குள் செல்லமுடிந்தது.

உள்ளூராட்சி அமைப்புத் தேர்தலில் சுயேச்சையாளர்களின் வெற்றிக்கு காரணம் என்ன?

கட்சிகளின் கொள்கை. மாற்றங்களினாலும், கொள்கைக்குழப்பங்களினாலும், மக்கள் மனதில் விரக்தியேற்பட்டு, 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என்ற இரண்டுங்கெட்டான்மனப்போக்கு ஒரு காரணம்!

அரசியல் உலகில் உச்சமட்டத்தில் இருப்பவர்களுக்கே கட்சி அரசியல் சிலவேளைகளில் கசந்திருக்கிறது.

"நமதுநாட்டின்முன்னேற்றத்திற்கு பெரும்முட்டுக்கட்டையாக விளங்குவது கட்சி அரசியல்தான்; காரணம் நாட்டு மக்களைப் பல்வேறு பிரிவுகளாக கூறுபோட்டகட்சி அரசியல்தான் வழிவகுக்கிறது'' என்று செனட்சபைத் தலைவரும், பழுத்த அரசியல் வாதியுமான செனட்டர் ஏ. ரத்னாயக்கா கூறியிருக்கிறார்.

இலங்கை அரசியலில் 'சாணக்கியன்' என்றுபெயர் பெற்றுள்ள திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாகூட, 'கட்சிஅரசியலால், முதிர்ந்த அறிஞர்கள் பலர் அரசியலுக்கு வர அஞ்சி ஒதுங்குகிறார்கள்' என்று கூறியிருக்கிறார்.

ஆனால் இந்த அச்சங்களுக்கும், ஐயப்பாடுகளுக்கும் சுயேச்சை வேட்பாளர்கள தான் சரியான விடையா? ஆட்சிமன்றமே இதற்குத் தக்க விடையளித்திருக்கிறது

1964ம் ஆண்டு, தேர்தல் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டபோது, கட்சிவேட்பாளர்களுக்கான கட்டுப்பணம் 500 ரூபாவிலிருந்து 250 ரூபாவாகக் குறைக்கப்பட்டது. சுயேச்சை வேட்பாளர்களின் கட்டுப்பணம் 1000 ரூபாவாகவே இருந்தது. அண்மையில் மீண்டும் தேர்தல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டபோதும், சுயேச்சையாளர்களின் கட்டுப்பணத்தைக் குறைக்க யாருமே முன்வரவில்லை. ஆட்சிமன்ற ஜனநாயமுறைக்கு, கட்சி அரசியல்தான் அடிப்படையாக அமைய வேண்டும்; சுயேச்சையாளர்கள் குட்டையைக் குழப்புபவர்களாகவே இருப்பார்கள் என்பதுதான் ஆட்சிமன்றத்தின் விடைபோலும்.

(சி பி ஏ)

0 0 0 0 0 0

## சுயேச்சை வேட்பாளர்கள்

| தேர்தல் ஆண்டு | போட்டியிட்டோர் மொத்ததொகை | வெற்றி பெற்றோர் | மொத்த வாக்குகள் | விகிதாச்சாரம் |
|---|---|---|---|---|
| 1947 | 181 | 21 | 549,381 | 29.2 |
| 1952 | 85 | 12 | 326,783 | 14.0 |
| 1956 | 64 | 8 | 289,491 | 11.0 |
| 1960 மார்ச் | 167 | 7 | 270,881 | 8.8 |
| 1960 ஜூலை | 39 | 6 | 140,522 | 4.6 |
| 1965 | 96 | 6 | 259,960 | 6.4 |

## “கணவருடன் படுத்திருந்தஎன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குளிர்சாதன வசதிகள்

யாழ்ப்பாணத்திலும் மற்றும் இலங்கையின் உஷ்ணமான உவர் வலயத்திலும் காய்கறி வகைகளை உற்பத்தி செய்யும் கமக்காரரை எதிர்நோக்கியுள்ள ஒரு பெரும் பிரச்னை என்ன வென்றால், உற்பத்திப் பொருட்களை நீண்டகாலம் கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைத்திருப்பது.

வெங்காயம், உருளைக் கிழங்கு முதலிய உப உணவுப் பொருட்களும், தக்காளி வெண்டி முதலிய காய்கறிகளும் மாம்பழம் முதலிய கனி வர்க்கங்களும் இலகுவில் காய்ந்தோ அழுகியோ கெட்டுப் போகும் தன்மையுள்ளவை. இவை பெரும்பாலும் பருவகாலப் பயிர்கள். ஒருகாலத்தில் ஏராளமாக உற்பத்தியாகும். மற்ற நாட்களில் அருமையாகி விடும். கூடுதலாக விளையும் காலத்தில் இவற்றை கெட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கு தோட்டக்காரரிடம் போதிய வசதிகள் இல்லை. விளைந்த பொருட்களை உடனடியாகக்கையகற்றி விடுவதற்கு போதிய விற்பனவு வசதிகளும் இல்லை. இதன் பலனாக உற்பத்தியாளர்கள் 'போட்ட முதலாவது கிட்டட்டுமே' என்று மிகக் குறைந்த விலைக்கு தங்கள் விளைபொருட்களை விற்கவேண்டிய நிர்ப்பந்தமும் சில சமயங்களில் ஏற்பட்டுவிடுகிறது.

உதாரணமாக உருளைக் கிழங்கை எடுத்துக்கொள்வோம். ஒரு மாதத்துக்கு முன்பே யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் உருளைக கிழங்கு அறுவடை செய்துவிட்டார்கள். கெட்டுப் போகுமே என்ற அச்சத்தினால் அந்தர் ஒன்று நாற்பத்தேழு முதல் நாற்பத்தொன்பது ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். கடைகளில் இருத்தல் ஒன்று ஐம்பது சதமாக பாவனையாளருக்கு கிடைத்தது. இப்பொழுது ஓர் அந்தர் உருளைக்கிழங்கு எழுபத்தைந்து, எண்பது ரூபாய்க்கு ஏறிவிட்டது. கடை விலையும் அதற்கேற்ப அதிகரித்துவிட்டது. கெட்டுப் போகாமல் வைத்திருக்கக் கூடிய வசதிகள் இருந்தால் உற்பத்தியாளர் கணிசமான ஆதாயம் பெறலாம்,

யாழ்ப்பாணத்தில் அதிகமாக உற்பத்தியாவதும். இலகுவில் அழுகிக் கெட்டுப் போகக்கூடியதுமான இன்னொரு பொருள் சின்ன வெங்காயம். ஒருபோக அறுவடை முடிந்து மறுபோக விதைப்பு வரை விதைவெங்காயத்தை அப்படியே குமிழ் குமிழாக வைத்திருக்கவேண்டும். விற்பனைக்குள்ள வெங்காயமும் உடனடியாக கையகற்றப்படாவிட்டால் பழுதாகிவிடும்.

வெங்காயம் பழுதடைவதும் போக, அழுகிப்போகும் வெங்காயம் மனித சுவாத்தியத்துக்கும் தீமையானது. அதிலிருந்து வெளிவரும் வாயுக்களும் நாற்றமும் நச்சுத் தன்மை வாய்ந்தவை

வெங்காயம் ஏற்றிவரும் கப்பல்களில் மூடைகளுக்கருகில் படுத்துறங்கிய மாலுமிகள் மரணமான செய்திகளையும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இப்படியான சங்கடங்கள் எல்லாவற்றையும் அகற்றி, உற்பத்தியாளருக்கு ஊக்கத்தை அளித்து விளைவைப் பெருக்க வைப்பதற்கு சிறந்த பரிகாரம் கெட்டுப் போகும் இப்பொருட்களை கெடாமல் பாதுகாத்து வைக்கக்கூடிய குளிர் சாதன வசதிகளே.

தனிப்பட்ட பாவனையாளர்கள் கெட்டுப்போகக் கூடிய பொருட்களை வாரக் கணக்கில் பாதுகாப்பதற்கு ஐஸ்பெட்டிகளை உபயோகிப்பது போல, பெருமளவில் வெங்காயம் உருளைக்கிழங்கு முதலியவற்றை பாதுகாத்து வைப்பதற்கு விசாலமான குளிர்சாதன அறைகள் அமைக்கப்பட வேண்டும். அரசாங்கம் இப்படியான வசதிகளை செய்துகொடுப்பது பெரிதும் விரும்பத்தக்கது எனினும் நல்ல ஆதாயத்துடன் சீரிய முறையில் நடத்தப்பட்டுவரும் கூட்டுறவு யூனியன்களும் இந்த விஷயத்தில் சிறிது அக்கறை காட்டலாம். தனிப்பட்ட முதலாளிகளும் இம் முயற்சியில் தலையிட்டுப் பார்க்கலாம்.

ஒரு காலத்தில் மலைநாட்டுக்கு மட்டுமே சொந்தமானவை என்று கருதப்பட்ட உருளைக்கிழங்கும், கோவா, கறட், போஞ்சி, பீற்றுட் முதலிய காய்கறி வகைக

பெரியநாடுகள் அதற்கு சாலைகளை நிறுவவேண்டியது இடையூறுவிளைக்க முனைந் அவசியம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1960 ஜூலை | 39 | 6 | 140,322 | [illegible] |
| 1965 | 96 | 6 | 259,960 | 6.4 |

# நடுவூர்ப்பழுத்த நன்மரம்



சைவ தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஊர்கள் தோறும் சிவாலயங்களை நிறுவுவதும், சைவப் பாடசாலைகளை அமைத்தலுமே சிறந்த தர்மம் என்று நாவலர் பெருமான் அன்றே கூறினார்கள். கூறியதோடு மாத்திரம் நில்லாமல் செயலிலும் காட்டினார் நாவலர் பெருந்தகை.

திரு முருகன் குன்றுகள் தோறும் திருவிளையாடல் புரிபவன். பல்கலைக்குரிசில்; நூலறிபுலவன். அவன் மலைநாட்டுத் தெய்வம். குறிஞ்சிக் கிழவன். அவனுக்குப் பல்கலைக்கழக வளவிலே மலை உச்சியிலே திருக்கோயில் ஒன்று அழகுற அமைத்திருக்கிறார்கள் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தார். பல்கலைக் கழகத்தாரின் இந்த நன்முயற்சிக்குப் பேராதரவு நல்கிய பிரமுகர்களில் அதி முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஒருவர் பொது வேலைப்பகுதி வீதி மேற்பார்வையாளர் சங்கத்தின் தலைவரான திரு. வே. த. செல்வத்துரை அவர்கள்.

மாணவரிடையே நாஸ்திகம் பரவி வருகின்ற இக்கால நிலையை உணர்ந்து, அத்துர்ப்பாக்கிய நிலையைப் போக்கி வருங்காலக் கல்விமான்களான பல்கலைக்கழக மாணவர்களும் ஆஸ்திகர்களாகவே வாழ்ந்து நமது நாட்டுக்குப் பயன்படக் கூடியவர்களாக வரச் செய்வதற்கு வழி, ஆலய வழிபாடே என்பதை நன்கு சிந்தித்த நற்சிந்தனையாளர்களில் ஒருவராக நமது செல்வத்துரை விளங்கினார். குறிஞ்சிக் கிழவனான குமரப் பெருமானுக்கு ஆலயம் நிறுவிய மாணவர் மன்றம், அதற்கு முன்னதாக முருகன் புகழ் பேசும் அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழான கந்த புராணத்தின் கருவூலமான தக்ஷகாண்ட உரை நூலை வெளியீடு செய்தனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட சிறந்த இந்த நூல் தக்ஷகாண்ட உரை நூல் அரங்கேற்று விழா ஈழத்தமிழர் சரித்திரத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததொரு பெருவிழாவாகும். இந்த நல்ல பணியில் ஈடுபட்டுழைத்தவர்களிலும் ஒருவராகத் திகழ்ந்தார் திரு. வே. த. செல்வத்துரை.

பேரழகு வாய்ந்த கண்டி நகர் வீதிகளையெல்லாம் மிகவும் சிறப்பாக செப்பனிட்ட திரு. வே. த. செல்வத்துரையின் நிதானமான உயர்ந்த ஒப்பற்றநற்சேவையை நமது நாட்டின் பிரதமரான டட்லி சேனநாயக்காவே சமுத்திர மத்தியில் கடந்த நவம்பரில் பாராட்டிப் பேசினார்.

ஓவசியர் சங்கத்தின் தலைவராக இவர் இருந்து செய்த சேவையின் உன்னத நிலையை சங்கச்சார்பில் திரு. றெட்ரிக்கோ கண்டி சைவ மகா சபையின் காரியதரிசியாகவும் உபதலைவராகவும் இருந்து ஆற்றிய சேவையை கண்டி சைவ மகாசபைத் தலைவரும் பல்கலைக் கழக சிரேட்ட தமிழ் விரிவுரையாளருமான கலாநிதி சு. வித்தியானந்தனும் கடந்த மாதம் 6-ம் திகதி திரு. செல்வத்துரையின் ஆன்மசாந்தியின் பொருட்டுச் செலுத்திய இறுதி அஞ்சலியின் போது கண்ணீர்விட்ட நிலையில் மனங்கசிந்து உரையாற்றினார்கள்.

திரு செல்லத்துரை தமது ஜெனன ஊராகிய உரும்பராயில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் திருக்கோயில் தேர்க் கொட்டகைத் திருப்பணிக்குப் பெருநிதி வழங்கினார். சிங்காரவேலனை சிதம்பரசுப்பிரமணியன் தேவஸ்தான வேலைகளுக்கும் காலத்துக்குக் காலம் பொருள் உதவினார், அன்னை பராசக்தியாம் பர்வத பத்தினி அம்பாளின் வருடாந்த மகோற்சவங்களில் ஒன்றையேற்று விதிமுறை தப்பாது விழாவை இனிது நடாத்தி வந்தார் உரும்பராய்க் கிராமத்தில்

கொண்டு பார்த்தோமேயானால் 62 உள்ளூராட்சி அமைப்புகளுக்காக 605 வட்டாரங்களில் நடைபெற்ற தேர்தல்களில் மொத்தம் 198 வட்டாரங்களைச் சுயேச்சையாளர்களே கைப்பற்றியுள்ளனர். சுமார் 16 அமைப்புகளில் அதிகாரம் சுயேச்சையாளர்களின் பலத்திலேயே தங்கியிருக்கிறது.

எனவே எதிர் வரும் பொதுத் தேர்தலிலும் 1947-ம் ஆண்டு பொதுத் தேர்தலைப்போல சுயேச்சை வேட்பாளர்கள் மீண்டும் பெருந்தொகையினராகப் போட்டியிட முன்வரலாம்.

1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 95 இடங்களுக்காக 360 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். சிலர் 181 பேர் சுயேச்சை வேட்பாளர்களே.

அன்றைய அரசியல் உலகில் லங்கா சமசமாஜக் கட்சி, போல்ஸ்விக் லெனினிஸக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், இலங்கைத் தேசிய காங்கிரஸ், தொழிற்கட்சி ஆகிய கட்சிகளே செயல்பட்டு வந்தன. எந்தக் கட்சிக்கும் தேசிய ரீதியான செல்வாக்கு இருந்ததாகச் சொல்ல முடியாது. தேர்தலுக்குச் சில காலத்துக்கு முன்பு அமைக்கப்பட்ட ஐக்கியதேசியக்கட்சி கூட கட்சி ரீதியாக வளர்ந்து செயல்படவில்லை. அவசரத்தில் அள்ளித்தெளித்த கோலமாக, வந்தாரை எல்லாம் வரவேற்று அமைக்கப்பட்ட கூட்டுக்கட்சியாகத்தான் ஐக்கியதேசியககட்சி அன்றைய காலகட்டத்தில் விளங்கியது.

## மதிப்புக் குறைந்தது

1966-ம் ஆண்டு ஐககிய தேசியககட்சிககு இணையான மாற்றுககடசியாக ஸ்ரீ லங்கா சுதந்திரககடசி வளர்ச்சியடையவும்,

பொது மக்களால் எடுக்கப்பட்ட எந்த நல்ல கருமத்துக்கும் திரு. செல்வத்துரையின் பரிபூரண ஆதரவு நிறைய இருந்தது. இவர் வாழ்ந்த காலம் ஐம்பத்திரண்டு ஆண்டுகளே. அயினும் அவர் செய்த புனித சேவைகளோ அளப்பரியன.

நடுவூர்ப் பழுத்த நன்மரம் போல நல்வாழ்வு வாழ்ந்தவரான ஓவசியர் திரு. வே. த. செல்வத்துரை இறைவன் திருவடி நீழலில் அமரராகிவிட்டார். இன்று அன்னாரது அந்தியேஷ்டியாகும்.

—அ. பஞ்சாட்சரம்

# “கணவருடன் படுத்திருந்த என்னை பாதிராத்திரியில் தூக்கிச்சென்றனர்”

## பெண்கடத்து வழக்கில் இளம் பெண்சாட்சியம்

மட்டுவில் வியாழன்

“என்னை முதலாம் எதிரியுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்தும்படி அங்கே உள்ளவர்கள் கூறியபோது, நான் திருமணமானவளென்றும், நானும் கணவரும் இரவு அறையில் படுத்திருக்கும் போது, கதவை உடைத்து என்னைக் கணவரிடமிருந்து பிரித்து பலாத்காரமாகத் தூக்கிக் காரில் ஏற்றிக் கொண்டு வந்தனரென்றும் சொல்லி என்னைக் கணவருடன் சென்று வாழ விடுமாறும், இல்லாவிட்டால் தற்கொலை செய்வேன் என்றும் அழுதேன்”

இவ்வாறு உடுத்திரபுரம் பெண்கடத்து வழக்கில் சாட்சியமளித்த சந்திராவதி கணேசலிங்கம் என்ற 20 வயதுப் பெண் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் கூறினார். இப்பகுதியில் பலத்த பரபரப்பை ஏற்படுத்திய இந்தப் பெண் கடத்து வழக்கைப் பார்க்க ஏராளமான மக்கள் கோர்ட்டின் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர். சுமார் நாலு மணி நேரமாகத் தொடர்ந்து விசாரணை நடைபெற்ற இந்த வழக்கில் சுமார் 3 மணி நேரமாக சந்திராவதியை எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் குறுக்குவிசாரணை செய்தனர்.

இன்று 2வது முறையாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் 1ம், 2ம், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ் அம்பலவாணரும் 3ம், 4ம், எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு வி செல்லத்தம்பியும் ஆஜராகியிருந்தனர். முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் திரு ஸி பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன், அட்வக்கேட திரு கே வி எஸ் சண்முகநாதன் ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கில் உடுத்திரபுரத்தைச் சேர்ந்த சந்திராவதி என்ற 20 வயதுப் பெண் திருமணமாகி ஒரு வாரத்தில், படுக்கையறையில் இரவில் கணவருடன் படுத்துறங்கும்போது, சுமார் 1மணியளவில் படுக்கை அறைக்கதவை பலாத்காரமாகத்திறந்து, கணவர் கணேசலிங்கத்தை தள்ளிவிட்டு அவர்மனைவி சந்திராவதியை பலாத்காரமாகக் கடத்திச் சென்றதாக கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

இந்தவழக்கு விசாரணை ஆரம்பமானதும் கவலை தோய்ந்த முகத்துடன் சோகமே உருவாக சந்திராவதி கூட்டில் ஏறினார். சந்திராவதி தொடர்ந்து தனதுசாட்சியத்தில் கூறியதாவது:-

எனக்கு டிசம்பர் மாதம் 7ம் திகதி பதிவுத்திருமணம் நடைபெற்றது. நாங்கள் உருத்திரபுரத்தில் எனது கணவர் கணேசலிங்கத்தின் வீட்டில் வாழ்ந்துவந்தோம் டிசம்பர்மாதம் 14ம்திகதி வழமைபோல், இரவு 8 மணியளவில் நாம் படுக்கும் அறையை உள்ளே பூட்டி விட்டு படுக்கைக்குச் சென்றோம்.

முதலாம் எதிரி இராமு இரத்தினத்தை எனக்கு முன்பு தெரியும். ஏனையோரையெனக்குத் தெரியாது விருந்தையிலும் 7, 8 பேர் நின்று கொண்டிருந்தனர், அவர்களை எனக்கு முன்பு அறிமுகமில்லை. அவர்களில் ஒருவரிடம் துப்பாக்கியிருந்தது ஏனையோர்கைளிலும் ஆயுதம் இருந்தது. ஆனல் இருட்டில் அடையாளம் தெரியவில்லை.

எதிரி என்னைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு குசினிக்குப் பின்புறத்தால் சென்று நெல்வயல் பக்கத்தில் உள்ள ஒரு வேலியைப் பிரித்துப் புதுக்கடவையால் போனார், பின் கிரவல்றோட்டில் என்னைப்போட்டார். நான்சத்தமிட்டேன் சத்தம் போட்டால் சுட்டுக் கொல்லுவதாக ஒருவர் துப்பாக்கியைதீட்டிப் பயமுறுத்தினார். இருவர் என் இருகைகளிலும் பிடித்து நிலத்தில் இழுத்துக் கொண்டுபோய் மகாவித்தியாலயம் றோட்டில் நின்ற கார் ஒன்றில் பலாத்காரமாக ஏற்றினர். நான்திமிறினேன்.

எனது [illegible]டதுபக்கத்தில் முதலாம்எதி[illegible]யும், சுற்றிவர வேறும் சிலரும் முன்சீற்றில் ஒருவரும் ஏற்றினர். இவர்களிடம் துப்பாக்கி உட்பட பயங்கர ஆயுதங்கள் இருந்தனர்ஏனையோர் வேறொரு காரில் ஏறினர். இரண்டுகார்களும் புறப்பட்டன. கரடிப் போக்கு சந்திக்கு வந்ததும் கார் நின்றது. 1ம் எதிரி காரிலிருந்து இறங்கி துப்பாக்கியை ஒளித்துவிட்டு காரில் வந்து ஏறினார். கார்கள் புறப்படடன

எமதுகார் தெல்லிப்பளைக்குச் சென்றது. அங்கே ஒரு வீடடில் இரு பெண்களும் ஒரு ஆணும்எம்மைவரவேற்றனர். என்னை வீடடின்பின் விருந்தைக்கு அழைத்துச சென்றனர். அங்கே ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது என் உள்பாவாடையிலும் சடடையிலும் இரத்தம் தோய்ந்திருந்தது எனவே உடுப்பை மாற்றும்படியும், தவறினல் தமககு ஆபத்தென்றும் அந்த வீடடுககாரப்பெண் வலியுறுத்தினர். நான்மறுத்தேன் பலாத்காரமாக என்உடையை மாற்றுவித்தனர்.

அப்பொழுது நான் திருமணமானவள்என்றும் என்னை பலாத்காரமாக என்கணவரிடமிருந்து பிரித்து விடடார்கள் என்றும் என்னை என் கணவருடன் செல்ல திருப்பி அனுப்பிவைக்கும்படியும் அவர்களை வேண்டினேன். அப்பொழுது எனக்கு ஒரு தீங்கும் வராமல் பார்த்துக் கொள்வதாகஅவர்ளிகல்ஒரு பெண் கூறினார். நான் அங்கு படுத்திருந்த இரண்டு குழந்தைகளுடன் சென்று படுத்துக்கொண்டேன்.

விடிந்ததும் எதிரிகளில் சிலர் வத்து என்னை முதலாம் எதிரியுடன் வாழ்க்கைநடத்தும்படியும் அதைவிட வேறு வழி கிடையாது என்றும் கூறினர். நான் என் கணவரிடம் என்னை அனுப்பாது போனல் தற்கொலை செய்வதாக அழுதேன்,

அன்று இரவு என்னை வேறெங்கோ கொண்டு செல்வதாக வரும்படி கூறினர் நான் அந்த வீட்டை விட்டுச் செல்லப்பயந்து மறுத்தேன். பின் என்னை ஒருவாறு காரில் ஏற்றிக் கொண்டு வந்து மட்டுவிலில் இறக்கினர் நானும்1-ம் எதிரியும் இறங்கினோம். கார் திரும்பிச் சென்றது, உடனே பொலிசார் வந்து எம் இருவரையும் கைதுசெய்து கொண்டுசென்றனர், நான் பொலிசில் வாக்குமூலம் கொடுத்தேன்

வழக்கறிஞர்களின் குறுககு விசாரணையின்பின் வழக்கு இம்மாதம் 24-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

கடை விலையும் அதிகரித்துவிட்டது. கெட்டுப் போகாமல் வைத்திருக்கக் கூடிய வசதிகள் இருந்தால் உற்பத்தியாளர் கணிசமான ஆதாயம் பெறலாம், இதனுல் உற்பத்தியும் பெருகும், பாவனையாளருக்கும் எந்தக்காலத்திலும் உருளைக் கிழங்கு கிடைத்து வரும்.

மலைநாட்டு உருளைக்கிழங்கு உற்பத்தியாளருக்கு இந்தப் பிரச்னை அவ்வளவு மோசமாயிராது. குளிர்ந்த பிரதேசம் ஆதலால் உஷ்ணமும், காற்றில் ஈரத்தன்மையும் குறைவு. உருளைக்கிழங்கு இலகுவில் பழுதடைய மாட்டாது.

ஒரு காலத்தில் மலைநாட்டுக்கு மட்டுமே சொந்தமானவை என்று கருதப்பட்ட உருளைக்கிழங்கும், கோவா, கறட், போஞ்சி, பீற்றுட் முதலிய காய்கறி வகைகளும் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஏதேஷ்டமாக உற்பத்தியாக்கப்படுகின்றன இவை ஒரு பருவத்துக்கு மட்டுமன்றி பாவனையாளருக்கு வருடம் முழுவதும் கிடைக்கக் கூடிய வகையில் உற்பத்தியாளருக்கு ஊக்கம் அளித்து விளைவைப் பெருக்க வைப்பதற்கு குளிர்சாதன அறைகள் வெகுதூரம் உதவியளிக்கும் என்பது நிச்சயம்.

—கலப்பை.

மிருசுவில் குடியேற்றத் திட்டத்தில்

# படித்த பெண்களுக்கு வீடு கட்ட நிதி உதவி

கொடிகாமம், வியாழன்

மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்ற திட்டத்தில் உள்ளவர்களுக்கு, வீடுகட்டுவதற்காக அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் 2000 ரூபா வழங்கியுள்ளது.

இக் குடியேற்ற திட்டத்தில் 50 படித்த பெண்கள் காணி பெற்றுள்ளனர். ஒவ்வொரு பெண்ணும் தனது காணியில் வீட்டைககட்டி அங்கு வசிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டமாகும்.

இப்பெண்களுக்கு வீடுகள் கட்டி கொடுப்பதற்கு காணி அபிவிருத்தி வேலைப் பகுதி முன்வந்துள்ளது. காணிஅபிவிருத்தி வேலைப் பகுதியினர் வீடுகள் அமைப்பதற்கு அங்கு முகாமிட்டு, நேற்று வேலைகளை தொடங்கியுள்ளனர்.

அரசாங்க பிரமாணப்படி ஒவ்வொரு வீடும், படுக்கையறை, சமையலறை. இருக்கையறை, விருந்தை ஆகியவற்றை கொண்டிருக்கும்.

இன்று முதல்
யாழ்-வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் — விஜயகுமாரி
நடித்த
செல்வியின்
செல்வன்

## வீரமாமுனிவர் விழா

மன்னார், வியாழன்

வீரமாமுனிவர் விழா வருகிற 4-ம் திகதி முருங்கன் கிறிஸ்துதாசர்ஆலய அரங்கில் நடைபெறவிருக்கிறது. மலர் வெளியீட்டைத் தொடர்ந்து பலர் உரையாற்றுவர். கலை, கதம்ப நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org